தென்மொழி

மானங் கெட்டதுகளும்!
மதி கெட்டதுகளும்!

மானங்கெட்ட நெடுஞ்செழியன்,
மதிகெட்ட வீரப்பன், இராசா ராமன்,
தானுங்கெட்ட தல்லாமல்
தமிழரையும் கெடுக்கின்ற சோம சுந்தரன்
ஏனிங்கே இறவாமல்
இன்னுமிருக் கின்றாரென் றெண்ணா மாறாய்
ஊனுடலில் உயிர்க்கின்ற
உருவங்களையிவரென் றெண்ணா வீரே!

ஈழப்பு லிகளைசெய்
தாரென்னும் பேரெத்தன், பிறந்த ஊராம்
வாழப்பா டி - என்னும்
பெயர் கெடுக்க வந்துநிற்கும் இராம மூர்த்தி,
தாழப்போ கின்றசெய
லலிதாவெ னும்தளுக்குக் காரி யெல்லாம்
வீழப்போ கின்றசெய்தி
விரைவாகக் கேட்கும்தமிழ் நாடு மிங்கே!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

சுவடி : 26
ஓலை : 1
விலை:
உருபா : 2-00

நமக்கு வந்த மடல்கள்.

O : *1445 :* மதிப்பிற்குரிய தென்மொழிக் காவல! வணக்கம்!

பல்வேறு இன்னல்களுக்கிடையிலும், இதழ்களின் சுமையைத் தலைமேல் தாங்கித் தமிழுக்கும், தமிழின முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்து வரும் தாங்கள் உடல் நலங்காத்துப் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

எங்களுக்கு (நாகராசன்-நாச்சம்மை) ஒரு பெண் மகவும், ஓர் ஆண் மகனும் பிறந்ததன் நினைவாகவும், அவர்கள் இருவருக்கும், தென்மொழி அறவாழியார் அவர்கள் "தென்றல்" "முகிலன்" என்ற தூயதமிழ்ப் பெயர்களை இட்டதன் நினைவாகவும் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா இருபது மட்டும் அனுப்பியுள்ளேன். அருள்கூர்ந்து ஏற்றுக் கொள்வீராக. பணிவுடன், க. நாகராசன், கட்டிடக் கலைஞன் அமரர் பூண்டி, அ.நி. பழனி வட்டம்.

O : *1446 :* பாவலரேறு ஐயா, அவர்களுக்கு வணக்கம்,

அரசியலில் தாங்கள் தற்போது மேற்கொண்டுள்ள நிலை பாராட்டுக் குரியது! இப்போதுதான் நீங்கள் வாழக் கற்றுக் கொண்டுள்ளீர்கள்! எவ்வளவு காலந்தான் இல்லாமை எனும் இருளில் உழன்று கொண்டிருப்பது?!

'புரட்சித் தலைவி'யின் அன்பும் அரவணைப்பும் உங்களுக்குக் கிடைப்பது உறுதி.

அரசவைப் பாவலராகத் தாங்கள் அமர்த்தப்படும் ஒரு வாய்ப்பும் வரலாம். அதனை வேண்டாம் என்று மறுத்து விடாதீர்கள் - பாவேந்தர் விழாக்குழுவிலிருந்து விலகியது போல! தேவர் அனையர்...! வாழ்க உங்கள் தமிழ் உணர்வுகள்! அன்பன்,

— க.சி. அகமுடைநம்பி, மதுரை.

O : *1447 :* பாவலரேறு பெருஞ்சித்திரனார் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து தொண்டாற்ற வாழ்த்தி வணங்குகிறேன்.

—தமிழ்நம்பி, விழுப்புரம்

O : *1448 :* உலக மூத்தக்குடி, பொன்குடி, தங்கக் குடியில் பிறந்திட்ட முதன் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழுக்கும், தமிழருக்கும், தமிழ் நாட்டிற்கும் ஓயாது உறங்காது தம் உயிர்ப்பாற்றலைக் கொடுத்து எந்நிலையிலும் தம் கொள்கையை விட்டுக் கொடுக்காமலும், இன்ப துன்பத்திலும் தொல்லை இன்னலிலும் கொள்கை பிறழாமலும், எதிரிகளுக்கு அஞ்சாமல் அறவுணர்வோடு சான்றாண்மையோடு, துணிவோடு தம் கடன் ஆற்றிவரும் ஏந்தல் பிறந்த இந்நாளில் 'எண்ணிய எண்ணியாங்குஎய்துப எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்'—என்ற ஆசான் குறளின்படி, கொள்கை திண்ணமாகும்.

மேலும் மேலும் துவளாமல் நடையிட நாங்கள் முடிந்தளவு

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

அடிமை மீட்குவோம்!

பாடலில் உரையினில்
　　பனித்த சொற்களில்
ஈடறும் நற்றமிழ்
　　எடுத்துக் கூறினேம்!
கூடுவ தில்லை, நம்
　　தமிழினம்; ஆங்கொரு
பீடுறுங் கொள்கையிற்
　　பிணைவதும் இல்லையே!

நூற்றுக் கணக்கினில்
　　மேடைகள் அமைத்தே
ஆற்றிய உரைகளுக்
　　களவுகள் இல்லையே!
ஏற்றமும் கண்டிலர்
　　எம்மினத் தமிழர்கள்!
மாற்றமும் ஆங்கவர்
　　மனத்தினில் இல்லையே!

நாற்பான் ஆண்டுகள்
　　நபத்தொடும் உளத்தொடும்
நோற்பார் போல் நொடி
　　நுடங்கலு மின்றியே
ஏற்பார் ஏற்பார்—என்
　　றெதிர்பார்த் திருந்தோம்!
மேற்பார் வையுமிலை;
　　மேன்மையும் இல்லையே!

இந்திரா இறந்திடில்
　　இவனும் இறக்கிறான்;
இந்திரா மகன்கொலை
　　எய்திடில் சாகிறான்;
தந்திறல் அறிகிலான்;
　　நாயமும் தெரிகிலான்;
நொந்தே மடிகிறான்;
　　நோய்-கடும் அடிமையே!

ஆயிரம் ஆண்டுகள்
　　அடிமையாய் உழன்றவன்;
வாயுரம் இழந்தவன்;
　　வாய்ப்புகள் துறந்தவன்;
நோயிலை; மூடனாய்
　　நுடங்கிப் போனவன்!
ஆ! இவ னைத்தான்
　　அடிமை மீட்குவோம்!

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே

([illegible] தி. பி. 1990 (1959))



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். தொலைபேசி: (847829)

சுவடி: 26] தி.பி. உ0உஉ மேழம்–விடை ([redacted] 91) [ஓலை: 1

இராசீவின் இறுதி! இட்ட சாவம் முட்டியது!

"ஒரு பொய்யைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தால், அதை மக்கள் மெய்யென்று நம்பி விடுவார்கள்"—என்பது வேதக் காலத்திலிருந்து இன்று வரையிலுள்ள பார்ப்பனியக் கோட்பாடு. இதைத்தான் ஆரியத் தலைவன் இட்லர் கடைப்பிடித்து, உலகத்தையே தன் வயப்படுத்தும் பேராசை கொண்டு, அன்றிருந்த செருமானிய யூதர்களை இலக்கக் கணக்கில் கொன்று அழித்து, உலகத்தையே தன்வயப் படுத்த எண்ணி, இறுதியில் தற்கொலை செய்து கொண்டு அழிந்து, குருதிக்கறை படிந்த வரலாற்றைத் தனதாக்கிக் கொண்டான்.

"தப்பித் தவறி ஆட்சிக்கு வந்து விடுகிற பார்ப்பான், தனக்கு இருக்கிற அனைத்து விளம்பர அதிகார விரிவாக்க வாய்ப்புகளையும் கருவிகளையும் பயன்படுத்திக் கொண்டு, தன்னை எல்லாரும் நம்பிப் பின்பற்றத் தக்க புனிதனாகவும் வல்லவனாகவும் ஆக்கிக் கொள்ள வேண்டும்"—என்பது சாணக்கியம்;

இதைத்தான் அன்றைய சாணக்கியன் முதல் இக்கால இந்திரா, இராசீவ் வரை, சூழ்ச்சியாகக் கடைப்பிடித்துத் தங்களை உலகத்திற்கே நல்லவர்களாகவும் மக்கள் தலைவர்களாகவும் வெளிச்சம் போட்டுக் காட்டிப் பச்சைப் பார்ப்பனீயத்தை இந்தியாவிலும் பிற உலக நாடுகளிலும் பரவலாக வலுப்படுத்திக் கொண்டு சென்றார்கள்.

''வேத மதத்தை (இக்கால் இந்து மதத்தை)க் கொண்டு, மக்களை அனைத்து வகையிலும் கவர்ந்து வயப்படுத்தி, மதி மயங்கச் செய்து, தன்னை நடமாடும் தெய்வ நிலைக்குப் பார்ப்பான் உயர்த்திக் கொள்ள வேண்டும்''—என்பது சங்கராச்சாரியம்! இதைப் பயன்படுத்திக் கொண்டுதான் ஆதி சங்கராச்சாரியன் முதல், காஞ்சியிலுள்ள கழிசடைப் பிறங்கடைப் பார்ப்பனர்கள் வரை, தூய அற நெறி சான்ற சமணத்தையும் பௌத்தத்தையும் வேரறுத்துத் தங்கள் கைக் கருவிகளான நான்கு வேத, ஆறு சாத்திர, பதினெண்வகைப் புராணங்களையும் இராமாயண, பாரத இதிகாசங்களையும் மக்கள் மண்டையில் ஆணி அறைந்தது போல் ஆழ அடித்து, அவர்களை மூளை வெளுப்புச் செய்து, அறிவியல் வளர்ச்சி பெற்ற வரை, இந்து மதம் என்னும் ஆரிய வேத மதத்தைப் பிற அறிவுக் கொள்கைகளால் அசைக்க முடியாமல் வேரூன்றச் செய்து, அறிவியலையும் பொருளற்ற புரையியலாக்கி வருகிறார்கள்.

இம் மூவகைப் பார்ப்பனீயக் கோட்பாடுகளைப் பயன்படுத்தித்தான், பார்ப்பனீயம் இந்தியாவில் மக்களின் நாடி நரம்புகளில் எல்லாம் பாய்ச்சப் பெற்று, எல்லா வகையிலும் அரசியல், பொருளியல், குமுகவியல் குற்றவாளிகளான இந்திராவையும், இராசீவையும் உலகத் தலைவர்களாக்கி, அவர்களைப் பிடித்து மக்கள் தொங்கிக் கொண்டிருக்கும் படி செய்து கொண்டிருக்கிறார்கள், பார்ப்பனர்கள்.

நாம் எதிர்பார்த்தவாறு, இராசீவின் முடிவு அவர் அன்னையைப் போலவே கொடும் அவலத்தில் முடிந்தது: உயிர் போவது வேறு; அதைப் பிறர் போக்குவது என்பது வேறு: தாய்க்கும் பிள்ளைக்கும் அவர்களின் உடல்களைச் சிதைத்து உயிர் வெளியேற்றப்பட்டது. வழக்கம் போல் சிதைந்த உடலைத் தூக்கி வைத்துக் கொண்டு, புனித நாடகம் போட்டு, நாட்டு மக்களிடத்திலும், உலக நாடுகளிடத்திலும் பெருத்த ஆரவார விளம்பரத்தையும், இரக்கத்தையும், கட்டியங்கூறிப் புண்ணிய வரலாறு எழுதி விட்டனர், ஆரியப் பார்ப்பனர்.

தேசியப் பொருளியல் மதிப்பை அறியாமல், வழக்கம் போல் அவர் அன்னைக்குச் செய்தவாறு இலக்கம் இலக்கமாக மக்களின் வரிப்பணத்தைச் செலவிட்டு, அவரின் சிதைவுற்ற உடலுக்குப் புனித நீராட்டு, சந்தன நெய் எரியூட்டு, சாம்பல் ஊர்வலம், புனித ஆற்றுநீர்க் கரைசல், பனிமலைத் தெளிப்பு, முதலிய மதச் சடங்குகளுடன், அரிய பெரிய உலகத் தலைமைக்கு உயர்த்திப்

பாடித் தெள்ளேனம் கொட்டி விட்டனர், அவரின் பின்பற்றிகளும், அரசியல் ஊதிய அதிகாரிகளும் குடும்பத்தினரும்! பார்ப்பான் இறந்தால், அவனைத் தேவனுக்கிக் தெய்வம் ஆக்கி ஊர்ப்பணத்தை உலர் வரத் தாராளமாகச் செலவழித்து, நெருப்பிலும் நீரிலும் கொட்டி விடுகின்றனர், பூணூல் திருமேனிகள். கேடபதற்குப் புலனறியா வாயில்லாப் பூச்சிகளான இந்திய நாட்டுப் பேதை மக்களிடம், இராசீவ் போன்ற அரசியல் குற்றவாளிகளையும் (Political culprit), பொருளியல் எத்தர்களையும், ஏய்ப்பர்களையும் (Economical Fraud), குமுகாயப் போக்கிரிகளையும் (Social Rogue)—பார்ப்பான் என்கிற ஒரே காரணத்துக்காக அவன் மன, அறிவுக் குறும்புச் செயல்களை அடியோடு மறைத்து மண்ணிட்டு மூடி, சமசுக்கிருத வேத மந்திரங்களை- உரக்கக் கத்தி மேலுக்குத்தூக்கி, வானுக்கு உயர்த்தி, வாழ்த்துப் பாடி முடித்து விட்டனர். இந்த வகையில் பார்ப்பனப் பெருச்சாளிகளும், அரசியல் அரம்பர்களும், மதவியல் சூதர்களும் மக்களால் மலர்மாலையிட்டு வணங்கத்தக்க உருவங்களாகி விடுகின்றனர்.

இராசீவ் வெடித்துச் சிதறிய நாள் முதல், ஒரு கிழமையாகப் பார்ப்பன நச்சுப் பாம்புகள் தொலைக் காட்சி, வானொலி எங்கும் படமெடுத்தாடின. அவர் இறப்பைச் சாக்கிட்டு, ஏழு நாள்கள் துயர முகாரி பாடின, தொலைக்காட்சியும் வானொலியும்! ஒரு கிழமை ஒதுக்கீட்டை நெருக்கடி நிலைக் காலம் போல் கருதி, பார்ப்பனர்கள் தங்கள் விருப்பம் போல் நன்கு பயன்படுத்திக் கொண்டு, இவ் விந்திய நாட்டைச் சார்ந்த ஏமாளி எவனும் ஏன், எதற்கு என்று கேட்காத வகையில், தங்களின் 'வேத வித்யா சாக்ர, சர்வ வியாபக, சத்துவ சனாதன சம்ப்ரதாய சம்ரக்ஷணைகளை வலுப்படுத்திக் கொள்ள, தங்களின் வம்சா சாதன சம்பத்துகளான பாகவதப் ப்ரஸங்கங்கள், பக்தி பஜன்கள், பகவத் ஸங்கீத நாமார்த்தனங்கள், வேத, புராண, இதிகாஸ ஆலாபனைகள், சத் கதா காலக்ஷேபங்கள், ஆதி ஸங்க்ர அதிமோக்ஷ ஸ்தோத்திரங்கள், சமஸ்கிருத வேத மந்த்ர பாராயணங்கள், ஸம்த்கார சங்கீத தாள நர்த்தனங்கள்—(தூய தமிழ் அன்பர்கள் பொறுத்துக் கொள்க! அவற்றை 'அவாள்' மொழியிலேயே சொல்வதே 'ஸ்ரேஷ்டம்' (!) என்பதால் இவ்வாறு எழுதப் பெற்றன என்க.)—முதலிய பச்சைப் பார்ப்பனக் கூத்தடிப்புகளை அந்த ஏழு இருண்ட நாள்களிலும் கேட்டு, நாம் 'பாரத' இந்தியாவில்தான்-பார்ப்பன ஆட்சியில்தான்-இன்னமும் இருக்கிறோம் என்பதை மேலும் உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டுவதாயிற்று! இராசீவின் சாத்துயரி நேரத்தை, மக்களிடத்தில் மூடத்தனத்தையும் அறியாமையையும் வளர்க்க நன்கு பயன்படுத்திக் கொண்டனர், அந்தக் கெட்டிக்காரப் பார்ப்பனப் பழவேக்காடுகள்! இந்தச் சூழ்நிலை, பார்ப்பனக் குஞ்சு குளுவான்களுக்கெல்லாம் பெரிய மனத்தாக்கத்தையும் உடல் நடுக்கத்தையும் ஏற்படுத்தியதில் வியப்பில்லை. சென்னைத் தொலைக்காட்சியில், நாளுக்கொரு வகை நகைகளும் உடைகளும் அணிந்து, திரைப்பட நடிகையைப், போல செய்தி படிக்கும் பார்ப்பனப் பெண் ஒருத்தி, இராசீவின்

மறைவால், கைம்பெண் கோலமே பூண்டு காட்சியளித்ததும், பார்ப்பனச் செய்தி படிப்பாளர் ஒருவர், தாடி மீசையுடன் கருப்பாடை அணிந்து தோற்றங் காட்டியதும் அத்தாக்கத்தினால் ஏற்பட்ட மாற்றங்களே!

இவர்கள்தாம் தம் அரசியல் தலைவரின் எதிர்பாராத மறைவால் தங்கள் துயரங்களையும் ஆற்றாமைகளையும் இவ்வாறு வெளிச்சம் போட்டுக் காட்டினார்கள் என்றால், நம் திராவிட இயக்கத் தலைவர்களும் 'மே 21-ஆம் நாளன்று நம் தமிழ் மண்ணில் சிந்தப்பட்ட அரத்தம் இந்தியத் திரு(டர்!) நாட்டின் ஒளி மிகுந்த ஓர் இளந்தலைவனின் அரத்தமன்றோ' என்றும், 'இவரைக் குண்டு வெடிப்பால் சாய்த்த செயலைக் காட்டு விலங்காண்டித்தனம் என்பதா? கோழைகளின் வெறிச் செயல் என்பதா?'— இழி குணத்தின் வெளிப்பாடு என்பதா? இரை தேடிய பதவிப் பசியின் பகை தீர்க்கும் படலம் என்பதா? இந்திய நாட்டு அரசியலில் குழப்பம் ஏற்படுத்த எங்கிருந்தோ வன்கணாளர் ஏவி விட்ட வஞ்சகம், சூது, சூழ்ச்சி என்பதா? என்றும், 'எதுவாயினும், அது தமிழ் மண்ணுக்கு நேர்ந்த களங்கம்; எளிதில் துடைத்தெறிய முடியாத வெட்கக் கேடு' என்றும் திரைப்பட 'வசனம்' பேசி, நீலிக் கண்ணீர் வடித்தனர்; என்னே தமிழர்களின் தன்மானக்கேடு! மாற்றானுக்கு வால் பிடிக்கும் வல்லடிமைத்தனம்!

இராசீவ் தம் தாயார் இந்திராவைப் போலவே உலகறிந்த அரசியல், பொருளியல் ஊழல் மன்னராகவே வாழ்ந்திருப்பதை உலகமே அறியும். மேற்கு செருமனியிடமிருந்து போர்க்கருவிகள் வாங்கிய வகையில் ஃபேர்பாக்சு (Fare Fax) முகவாண்மை நிறுவனத்துடனும், சுவீடன் நாட்டுத் தகரிகள் (டாங்கிகள்) வாங்கிய பேரத்தில் அங்குள்ள போஃபர்ச்சு நிறுவனத்துடனும், சப்பான் நாட்டிலிருந்து நீர்மூழ்கிக் கப்பல் வாங்கிய பேரத்திலும் இராசீவ் அடித்த கோடிக் கணக்கான உருபாக் கொள்ளைகள் மிகப்பெரும் பெயர் பெற்றவையன்றோ?

இராசீவின் அன்னை இந்திரா செய்த முந்திரா ஊழலை, அவர் கணவரும், இராசீவின் தந்தையும் ஆகிய பெரோசு காந்தியே அம்பலப் படுத்தினார். அவரினும் மேலாக, 'தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறடி பாயும்' என்னும் பழமொழியை, இராசீவ் இறக்குமதி உரிமம் வழங்குவதில் செய்த ஊழல், மாருதி சிற்றுந்து ஊழல்—முதலியவை மெய்ப்பித்துக் காட்டின. இந்திரா செய்த நகர்வாலா கொலை போன்ற பன்னூற்றுக் கணக்கான கொலைகளுக்கு மேலும், இராசீவ், அவர் அன்னை கொலை செய்யப் பட்ட 1984 அக் 31-இலும் அதற்குப் பின்னும் திட்டமிட்டுப் பல நூறு கொலைகளைச் செய்ய ஆட்களை ஏவி விட்டார். அக் கால கட்டத்தில் தில்லியில் மட்டும் ஏறத்தாழ மூவாயிரம் பேர்களுக்கு மேல் கொலைகள் செய்யப்பட்டனர். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வண்டிகள் கொளுத்தப்பட்டன. 2174 வீடுகள், தொழிற்சாலைகள், கடைகளுக்குத் தீயிடப் பெற்றன; ஏறத்தாழ

300 கோடிக்கும் மேற்பட்ட சொத்துகள் அழிக்கப்பட்டன. இவையெல்லாம் இந்திராவின் கொலைக்குப் பின் மக்கள் எழுச்சிக்கிடையில் இயல்பாக நேர்ந்தவையல்ல. திட்ட மிட்டு நிகழ்த்தப் பெற்றவை. இவற்றை இராசீவின் அரசியல் திருவிளையாடல்கள் என்றே சுருக்கமாகவும் விளக்கமாகவும் கூறிவிடலாம்.

இத்தனை அழிம்புகளுக்கும் இன்னும் எத்தனை யெத்தனையோ தொடர் ஊழல்களுக்கும் காரணமான இராசீவைத்தான், அவர் மறைவு நாளில், உலகத்தலைவர் என்றும், பாரதத்தை மேம்படுத்த வந்த மாபெரும் ஆற்றல் வாய்ந்தவர், இந்தியாவின் அருமை பெருமைகளை உலகளவில் உயர்த்திய பிறவித் தலைவர் என்றெல்லாம் அளவுக்கு மீறிப் புகழ்ந்து பாராட்டித் தங்கள் பதவிப் பேராசைகளுக்கு உயர்ச்சி காட்டிக் கொண்டனர். 'இராசீவ் இல்லையானால், ஏதோ இந்தியாவே அழிந்து விடுவது போல்' ஒப்பாரி முழக்கினர்.

ஒரு நாட்டின் தலைமையமைச்சராக யார் வந்து அமர்ந்தாலும், அவர் பதவியில் உள்ளபோது மறைந்தால், பிற உலக நாடுகளின் தலைவர்களில் பெரும்பாலாரும் வந்து இரக்கம் தெரிவிக்கவும், அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு இரங்கல் உரை ஆற்றவுமே செய்வர், இப் பொதுவாக நடந்த நடைமுறையை, ஏதோ இராசீவுக்காக நடந்த பெருமைக்குரிய சிறப்பு நடைமுறையாகவே வண்ணித்து வானளாவ இராசீவைப் புகழ்ந்து தள்ளினர், இங்குள்ள பார்ப்பனர்களும் அவர்களின் அடிவருடிகளும்!

இந்த வகையில் இராசீவின் மறைவை, அவர் அன்னை இந்திராவை விடவும், அவர் பாட்டனார் நேருவை விடவும், இன்னும் உலக நாடுகள் அனைத்திலும் உள்ள தலைவர்களுக்கெல்லாம் மேம்பட்ட தலைவராகவும் காட்டியதும், இந்தியாவுக்கு இவர், பிறர் யாருமே ஆற்றவொண்ணாத பெருந் தொண்டும் ஈகமும் செய்தது போல மிகைப் படுத்தி விளம்பரம் செய்ததும், அண்மையில் நடை பெற விருந்த தேர்தல் ஊதியத்திற்காகவும், அவர் மேல் படர்ந்திருந்த உலகப் பெரும் ஊழலை மறைப்பதற்காகவும், இந்தியாவில் பார்ப்பனத் தலைமையை நிலைப்படுத்திக் கொள்வதற்காகவும், இங்குள்ள பார்ப்பனத்தலைவர்களும், இந்திரா பேராய அரசியல் தலைவர்களும் கையாண்ட தந்திர உத்திகளே ஆகும்.

இராசீவைக் குண்டுவெடித்து அழிவுறச் செய்தவர்கள், இவ்வகையில் மிகப் பெரும் அறிவாளிகளும், ஈகிகளும், மக்கள் நலம் கருதியவர்களுமே ஆவர்; இல்லெனில், இந்தியாவில் வேறு எவருக்குமே இல்லாத அளவில் ஓர் ஆண்டுக்கு உருபா இருபது கோடிச் செலவில் பாதுகாப்பு வளையத்திற்குள் வாழ்ந்த இம் மிகப் பெரும் ஊழல் மன்னனைத் தந்நலப் பித்தனை, வேறெவரும் வேறெவ் வகையிலும் முடிவுறும் படி செய்திருக்கவே இயலாது.

(தொடரும்)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைம்மாறு செய்வது என்று நினைத்திருந்த வேளையில் தங்கள் உரை என் சிந்தனையைத் தூண்டிவிட்டது. அனைத்தும் தமிழாகவே வாழ்ந்து கொண்டிருக்கிற தங்களுக்குத் துணையாகச் செய்யும் உதவி, தமிழினத்திற்கு செய்கின்ற கைம்மாறுக கருதி உருபா ஆயிரத்தைத் திருக்குறள் மெய்ப்பொருள் உரை செயலாக்கத்திற்குக் கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியவுடன் காலம் கடத்தாமல் செய்வதுதான் சிறந்தது என்றும் தெரியும். இடையில் என் மன ஊசலாட்டத்தினாலும் (கொடுக்கலாமா, வேண்டாமா), என் பொய்யான பொருளியல் சிக்கலினாலும் (உண்மையாகவும் இருக்கலாம்) இவ்வெண்ணம் செயலாக மலராமல் தடைப்பட்டுக் கொண்டே இருந்தது. ஆனாலும் என் மாறாத எண்ண அழுத்தத்தினால், இன்று இந்தத் தொகையை அளிப்பதன் மூலம் தமிழினத்திற்கு நான் செய்ய வேண்டிய கடமையில் ஒரு சிறு பகுதியை நிறைவேற்றிய பெருமையை அடைகிறேன்.

உலகத் தமிழனத்தின் விடுதலைக்காகப் போராடும் தமிழீழ விடுதலைப் (புலிகள்) போராளிகள் தங்கள் இன்னுயிரையே ஈகம் செய்கின்ற செயலோடு ஒப்பிடும் போது, தமிழ் நாட்டில் தமிழ், தமிழினத்தின் நலன் பற்றி மக்களிடையே வாய் கிழியப் பேசும் தமிழ் அன்பர்களும், ஆர்வலர்களும் தமிழ் இனத்திற்காக உண்மையாகவே என்ன செய்து விட்டோம் என்று நினைத்துப் பார்த்தால், நம் நிலைக்காக நாமே வெட்கப்படவேண்டும். இதை ஆங்காங்கு இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ் நல (இலக்கிய) அமைப்பைச் சேர்ந்தவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். இவ்விடத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். அமைப்பாக இயங்கும் போது அன்பர்கள் இடையே அமைப்பைச் சார்ந்து அல்லது தனிப்பட்ட முறையில் சில மன வேறுபாடுகள் தோன்றத்தான் செய்யும். நம்முடைய வாழ்வியல் அப்படி உள்ளது. அவற்றையெல்லாம் தமிழ் இன நலம் கருதி ஒதுக்கிவைத்து விட்டு இனத்திற்கான, நன்றிக் கடனுக்காகக் கடமை உணர்வோடு செயல்பட வேண்டும்.

இன்று நாம் செய்யக்கூடிய செலவுகளை மனத்தில் இருத்திச் சிந்தித்துப் பார்த்தோமானால் (புகை, மது, திரைப்படம், போக்குவரத்து, துணி மணிகள், வேண்டாத தின்பண்டங்கள் இன்னபிற) தவிர்க்கக் கூடிய செலவுகள் என்று சில இருக்கும். இவற்றில் முடிந்தவரை குறைத்துக் கொண்டு அல்லது வாங்குகிற சம்பளத்தில் உருபா ஆயிரத்திற்கு ஐந்து அல்லது பத்து உருபா ($\frac{1}{2}$./• முதல் 1•/. வரை) தமிழ்க் குமுகாயத்திற்கு செலவிடுதல் என்பது இனத்திற்குச் செய்கின்ற நன்றிக் கடனாகும்.

ஐயா! ஆதரவு நிலை என்பது எவ்வாறேனும் இருக்கலாம் என்று தாங்கள் ஏற்கனவே கூறியுள்ளீர்கள். அவ்வகையில்

என்றால் முடிந்த பொருள் நிலை ஆதரவைத் தங்களுக்கு என்றும் அளிப்பேன். இதன் மூலம் இத்தமிழ் குமுகாயத்திற்கு என் கடமையைச் செய்வேன். அதற்கான மன ஆற்றலை அனைத்திற்கும் மேலான பேராற்றல் எனக்கு அளிக்க வேண்டும் என வேண்டு-கிறேன்.

நன்றி! வணக்கம்! என்றும் தங்கள் உண்மையுள்ள
— சு. திருவாணன், சென்னை-103

குறிப்பு : இம்மடலுடன் உருபா 1005/ இணைந்துள்ளேன். மடல் நீண்டதற்கு வருந்துகிறேன். மடலில் எந்தப் பிழை இருப்பினும் மன்னிக்க வேண்டுகிறேன்.

(ஆசிரியர் குறிப்பு : பேரன்புடையீர் தாங்கள் நேரில் வந்து கொடுத்த உருபா ஆயிரத்து ஐந்தை நிறைந்த நெஞ்சு கலந்து நன்றியுடன் பெற்றுக் கொண்டேன். தங்கள் அன்பான வேண்டு-கோள் நிறைவேறுமாறு திருக்குறள் மெய்ப்பொருளுரை போதிய நேரமும், சூழலும், தக்க துணையும் அமையும் பொழுது கட்டாயம் எழுதி என் வாணுளுக்குள் முடிக்கப் பெறும். அதற்கு எல்லாம் வல்ல இறைப்பேராற்றல் துணை நிற்கும் என்று உறுதி யாக நம்புகிறேன். தங்கள் அன்புக்கு மீண்டும் நன்றி — ஆசிரியர்.)

O

தமிழ் எனும் கூட்டினுள் தமிழரே இணைக!

நெஞ்சிலும் நினைவிலும் தமிழனே நீதான்!
நெட்டுயிர்ச கின்றஎன் மூச்சிலும் நீதான்!

எஞ்சிய புகழினை எண்ணுநல் செய்வாய்;
எத்தனை நாட்டினை அடைக்கலம் கொண்டாய்.

கொஞ்சமும் நம்நிலை கருதுகி லாயே!
கூறு மொழிக்கிரு செவிகளும் தாராய்!

அஞ்சுதல் கண்டனை; அடங்குதல் செய்வாய்!
ஆயிர மாயிர மாண்டுகள் வீழ்ந்தாய்!

—'கனிச்சாறு'

புலவர் கந்தக்கண்ணன் மறைந்தார்!

விழுப்புரம், புலவர் கந்தக்கண்ணன் முன்னாள் தென்மொழி அமைச்சராகப் பணியாற்றிய அரும் பெருந் தொண்டர். ஆசிரி-யர் மேல் அளவற்ற பத்திமையும் நன்மதிப்பும் கொண்ட தூய அன்புளத்தவர். அவர் அண்மையில் உடல் நலக் குறைவினராக இருந்து, கடந்த 18-4-91-இல் மறைந்து போனார் என்னும் செய்தி எரியென நெஞ்சில் பற்றியது. அவர் மறைவால் ஆற்றுத்துயருறும் அவர் குடும்பத்தார்க்கும் நண்பர்களுக்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரக்கத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்-கிறது.

— ஆசிரியர்.

"என்று தணியும் இந்த ஆங்கில மயக்கம்!"

'த. சை. தமிழ்ச்செல்வன்.'

"தமிழ்மொழி வாழ்ந்தால் மட்டும் போதாது; தமிழர்களும் வாழ வேண்டும்; அதற்குத்தான் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்கிறோம்" என்று தமிழக முதல்வர், தமிழ் வளர்ச்சி மன்றச் செயலர் பேராசிரியர் இராம. சுப்பிரமணியன் எழுதிய "தொல்காப்பிய எழுத்துப் படலப் பேருரை" என்ற நூல் வெளியீட்டு விழாவில்(நாள் : 14—06—90, இடம் : சென்னை நாரத கான சபா) மேற்கண்டவாறு பேசியுள்ளார்.

அதுமட்டுமல்லாமல் 'ஆங்கிலம் என்கிற கேடயம் இல்லா விட்டால் 'இந்தி' என்கிற வாள், தமிழர்கள் எல்லாருடைய நெஞ்சிலும் பாயும்' என்றும், தமிழுக்கும் ஒரு காலம் வரும்; அது-வரை காத்திருக்க வேண்டும்; அதற்குக் காலம் கனிய வேண்டு மென்றும் பேசியுள்ளார்.

தமிழன் ஒருவன் தன் தாய்மொழியை நன்றாக கற்றுக்கொள்வ தோடு பிறமொழிகளை வாய்ப்புக்கும் ஏத்துக்கும் ஏற்பத் தாராளமாகக் கற்றுக் கொள்ளலாம் என்பதை யாரும் எதிர்க்க மாட்டார்கள்; வரவேற்பர்.

வரலாற்றுப் பெருமையும், வளமையும் கொண்ட தமிழ் மொழி தமிழ் மண்ணில் எல்லா நிலையிலும், எல்லா வகையிலும் "செல்வ உயர்ச்சியுடன் விளங்க வேண்டும் மென்பதே எல்லா-ரின் விருப்பமாகும். தமிழ் மண்ணில் தமிழுக்கு வாய்ப்பும், செல்வ உயர்ச்சியும் கிடைத்தால்தான் தமிழ்மக்களுக்கு அவை கிடைக்க முடியும். தமிழ் மொழிக்கு வாய்ப்பும் ஈடுபாடும் மறுக்-கப்பட்டால் தமிழ் மக்களுக்கும் அவை மறுக்கப்படுகின்றன என்பதுதான் பொருள். ஆனால் கலைஞர், பயிற்று மொழி நிலையி-லிருந்து ஆங்கிலம் இடம் மாறினால் அந்த இடத்திற்கு 'இந்தி' வந்து விடும்" என்று மொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுகிறார்.

உத்திரப்பிரதேச முதல்வர் தம் மாநிலத்தில் எல்லா நிலையி-லும், எல்லாத்துறைகளிலும் மாநில மொழியாகிய "இந்தி"யைப் பயன்படுத்த வேண்டும் என்று அறிவித்து, அம்மாநிலத்தில் தாய் மொழிக்கல்வி எல்லா வகையிலும் செயல்படத்துவங்கி விட்ட தைக்கலைஞரும் அறிவார். இன்னும் சொல்லப்போனால் அண்டை மாநிலமான கருநாடகத்தில் 'கன்னடம் வாழ்க' 'எங்கும் கன்ன-டம்' எதிலும் கன்னடம்' என்று வாய்கிழிய முழக்கம் போடாமல் தங்களின் தாய்மொழியாகிய கன்னடத்தை எல்லாத் துறைகளி-லும் பயன்படுத்தியும், செம்மைப்படுத்தியும், பாதுகாத்தும் வரு-வதைத் தமிழக முதல்வர் அறியாமல் இல்லை.

தமிழ்த்திருநாட்டில் ஏன் தமிழுக்கு முதலிடமில்லை, ஏன் எல்லாத்துறைகளிலும் தமிழ்மொழி இல்லை, என்பதை எண்ணிப் பார்க்கும்போது "நெஞ்சு பொறுக்குதில்லையே, இந்த நிலை கெட்ட மாந்தரை நினைந்து விட்டால்" என்ற பாரதியின் பாடல் வரியே நினைவுக்கு வருகிறது. தமிழ் வேறு, தமிழர் வேறு என்கிறார் போலும் கலைஞர். 'தமிழ் வாழ்ந்தால்தான் தமிழன் வாழ்வான்; தமிழ்நாடு வளம் பெறும் என்பதைக் கலைஞர் அறியாதவர் அல்லர்.

இன்றைய தமிழக ஆட்சியாளர்கள் இந்நிலையிலிருக்க, பாவேந்தர் நூற்றாண்டு விழாவினைச் சீரும் சிறப்புமாய் நடத்த வேண்டுமென்று திட்டங்கள் வேறு பல வகுத்துள்ளார்கள்.

"ஆங்கிலத்தைக் கற்கையிலும்
அயல் மொழியைக் கற்கையிலும்
எந்த நாளும்
தீங்கனியைச் செந்தமிழைத்
தென்னாட்டின் பொன்னேட்டை
உயிராய்க் கொள்வீர்!"

—என்றுதான் பாவேந்தர் பாடினாரே தவிர, ஆங்கிலத்தைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடவும் என்று பாடவில்லை என்பதைக் கலைஞரும் அவரைச் சேர்ந்தவர்களும் நினைவில் வைத்துக் கொண்டு தமிழுக்கு முன்னுரிமைக் கொடுத்து எல்லாத் துறைகளிலும் தமிழையே பயன்படுத்த வேண்டும். அதுதான் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில் பாவேந்தருக்கு நாம் செய்யும் சீரும் சிறப்பும், மதிப்புமாகும். அப்படித் தமிழைச் சரியாகப் பயன்படுத்தத் தவறினால்,

"தமிழகம் மீள வேண்டும்
தமிழர்கள் வாழ வேண்டும்
அமிழ்தான இக்கொள் கைக்கே
அருந்தொண்டு செய்பவர் போல்
தமைக் காட்டிக் கொண்டே சில்லோர்
தமதுடல் வளர்க்கின் றார்கள்;
இமைப்பினில், இவர்கள் எல்லாம்
ஒழிந்தால்தான் இயக்கம் வாழும்!"

— என்ற பாவேந்தரின் பாடல் வரிகள் தமிழக மூலை முடுக்கெல்லாம் ஓங்கி ஒலிக்கும் என்பதை அனைவரும் விரைவில் உணர்வார்கள். o

---

தமிழ் நாட்டில் தமிழ்வழிக் கல்வி
கற்காமல் வேறு எங்குக் கற்பது?

நூல்: சிந்தனை ஊற்று.

ஆசிரியர்: இறையரசன்.
வெளியீடு: மணிமேகலைப் பதிப்பகம்,
கருவூர் வட்டம்.
சின்ன தாராபுரம் 639 202.
பக்கங்கள்-104 விலை. உரு, 7.50

இஃது ஒரு பாடல் தொகுப்பு நூல். தன் இனம், மொழி, நாட்டை மீட்டெடுக்கும் கொள்கைகள் ஏந்திய உயிர்த்துடிப்பு-உடைய பாவலர் இவர் என இந்நூலைப் படிக்கையில் நாம் ஒரு முடிவுக்கு வரமுடிகின்றது. ஏதோ பாடல்கள் எழுதவரும், அதனால் எழுதவேண்டும் என்பதற்காக என்றில்லாமல் உண்மை-யிலேயே தன் நெஞ்சில், சிந்தனையில் ஊற்றென ஊறி எழுந்து வரும் எண்ணங்களை- கருத்துகளைத் தமிழ்மக்களுக்குப் பயன்-படும் வகையில் பாடல்களாக யாத்துத் தந்துள்ளார். இவர் சிலர் போன்று ஒரு கொள்கைப் பிடிப்பும் இல்லாமல் எதையும், எப்படியும் எதற்காகவும் பாடல்கள் என்ற பெயரில் உளறிக்-கொட்டும் போக்கு இல்லாதவர் இவர்.

பாவலர் சிலர்போன்று தாம் எழுதும் பாடல்கள் வேறு, தாம் வாழும் நடைமுறை வாழ்க்கை வேறு என்றில்லாமல், தாம் கொண்ட கொள்கைகளையே வாழ்க்கையாக்கிக் கொண்டு வாழும் இவர் தம் நூலுள் தந்துள்ள பாடல்கள் யாவும் மரபு வழுவாதவை. ஓசை, சந்தம் சிதையாதவை. வெண்பா, சிந்து, மண்டிலம் ஆகிய யாப்புகளுக்குள் அடங்கியவை. இந்நூலுள் மொத்தம் நாற்பத்தொன்பது பாடல்கள் உள்ளன. அவற்றில் இறுதியாக வரும் தமிழன் கண்ட அரசியல், காமராசர், ஞாயிறு, விருந்தோம்பல் ஆகிய நான்கும் பாவலர் பாட்டரங்கில் பாடி-யவை. மீதம் உள்ள நாற்பத்தைந்தும் பல்வேறு தலைப்புகளில் உள்ளவை. அவற்றில், நம் இனமானத்தலைவர்களாகிய பெரியார், அண்ணா, காமராசர், பாவேந்தர் ஆகியோரை நினைவு கூர்ந்து பாவலர் பாடிய பாடல்களும் அடங்கும்.

''பாட்டுக்குப் பட்டாளப் பாவலரைத் தோற்றுவித்து" (பக்கம்-65) என்று பாவேந்தரைச் சுட்டிப் பாவலர் எழுதியுள்ள வரி நினைந்து பெருமை கொள்ளத் தக்கது. பாரதிக்குக் கூட இப்பெயர் வாய்ப்பு இல்லை என்பது எண்ணத்தக்கது.

"அண்ணனே பிறந்தாய் இந்த
அருந்தமிழ் இனத்தைக் காக்க!
புண்ணெனும் புராண வேதப்
புழுக்குடம் புதைத்தாய்! இன்பப்
பண்ணெனத் தமிழர் வாழ்வில்
பாய்ச்சினுய் கருத்து வெள்ளம்!
கண்ணெனக் கருதி மூத்த
கவின்தமிழ் மாண்பு காத்தாய்!" (பக்கம்-55)

எனப் பேரறிஞர் அண்ணு அவர்களைப் பாவலர் பாடியிருப்பது இன்றைய இளைய தலைமுறையினர்க்கு அவரை இனம் காட்டுவது போன்று இருக்கின்றது.

"விரிவானம் தான்சரிந்து வீழ்ந்த துண்டா?
வியப்பரிய இமயமலை பெயர்ந்த துண்டா?
எரிகதிரோன் எழுந்துவரல் நின்ற துண்டா?
இவ்வுலகம் நிலையாக இருண்ட துண்டா?
விரிகடலும் நீர்வற்றிப் போன துண்டா?
விரிந்தபெரும் மண்ணுலகம் அழிந்த துண்டா?
ஒருபெரியார் உடல்மட்டும் வீழ்ந்த போதில்
உண்மையிலே இவைநிகழ்ந்த துன்பம் கொண்டோம்!
(பக்கம் 59)

பெரியார் அவர்களின் பிரிவாற்ருமையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இப்பாவலர் எழுதியிருக்கும் இப்பாடல் வரிகளைப் படிக்கும் பொழுது அவருடன் சேர்ந்து நாமும் அழுகிருேம்.

இப்படி, திருக்குறள், பொதுமை, பண்பு, இன்பம், ஈழம் மீட்போம் போன்ற பல்வேறு தலைப்புகளில் வரும் பாடல்கள் அனைத்தும் நல்ல நடை, ஓட்டம் உடையவை! கருத்து ஆழம் கொண்டவை! வீரஞ் செறிந்தவை! பாட்டு நயம் பெற்றவை! தமிழரைத் தட்டி எழுப்புபவை!

காதலையும் அதனுல் ஏற்படும் உள்ளச் சுவையையும் பாவலர் பாடாமல் விட்டாரில்லை,

"இதுவரையில் நான்கண்ட தில்லை!—இவள்
எழிலென்னும் முகட்டுக்கோர் எல்லை!"
"கூன்கிழமும் அவள்பின்னே ஓடும்!—அவளைக்
கொஞ்சுகின்ற ஆசையினுல் வாடும்!" (பக்கம்-44)

இவைபோன்ற வரிகளில் காதலின் வேகத்தையும், அது கிடைக்கப் பெருமையால் ஏற்படும் மனத்துன்ப உலைச்சலையும்

அவர் நகைச்சுவைப்படப் பாடியிருப்பது படித்துச் சுவைக்கத் தக்கது. சிரித்து மகிழத்தக்கது: இப்படிப் பல.

முற்றிலுமாக ஆற்றொழுக்கான தனித்தமிழ் நடையில் அமைந்துள்ள இப்பாடல் நூலைத் தமிழன் அனைவரும் வாங்கிப் படித்து மகிழலாம். ஒவ்வொரு நூல் நிலையத்திலும் இந் நூல் இடம்பெற அரசு ஆவன செய்யலாம்,

கருணை, இமயமலை. பதில் போன்று ஓரிரு வட சொற்கள் பாடல்களில் வந்திருக்கின்றன. பாவலர் முயன்று இவற்றையும் களைந்து எழுதியிருக்கலாம்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பாராட்டுப் பா நூலுக்குக் கிடைத்தது தனிச்சிறப்பு.

தமிழ்ச்சுடர் இளமுருகு பொற்செல்வி, பர்.கு.ப. கணேசன், பாவலர் கடலூர். மணிமாறன் ஆகியவர்கள் நூலுக்கு மதிப்புரை-கள் கொடுத்துள்ளனர்.

''புற்றீசலாய்ப் புறப்பட்டு வரும் புதுப்பாடல் (!)களுக் கிடையே நான் அழுத்தமாகக் கால் ஊன்றி நிற்கிறேன்; மரபில் பிறழ்வதைக் கற்பில் வழுக்குவதாகவே நான் நினைக்கிறேன்'' என்று நிமிர்ந்து பேசும் பாவலர் இறையரசனை நாம் வெகுவாகப் பாராட்டி மகிழ்கிறோம்; தொடர்ந்து அவர் பாட்டுலகில் வெற்றி பெற வாழ்த்துகிறோம். — அரிமா

வெளிவந்துவிட்டது!

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

அரிய கருத்துரைகள் அடங்கிய கருவி நூல்!
தமிழீழப் போராட்டத்தின் முழுவடிவமும்,
போராளிகளின் முயற்சிகளும், சிங்கள,
இந்திய அரசியல் சூழ்ச்சிகளும்
உள்ளடங்கிய அரிய நூல்!

தமிழீழம்

(போராளிகளும், போராட்ட முயற்சிகளும்)

1970 முதல் இதுவரை ஆசிரியர் தென்மொழி, தமிழ்நிலம் ஆகியவற்றில் அவ்வப் பொழுது எழுதிய அரிய கட்டுரை, பாடல்-களின் தொகுப்பு! ஏறத்தாழ 550 பக்கங்கள் கொண்டது!

55 உருபா மதிப்புள்ள நூல்! முழுத்தொகையுடன் அஞ்சல் செலவு 5 உருபாவும் அனுப்பி வைப்பவர்களுக்கு நூல் உடனே (Recorded Dely) பதிவுக்கொடுப்பஞ்சலில் அனுப்பி வைக்கப் பெறும். முன்பே 35உருபாவிடுத்தவர்கள், மேலும் உரு 25விடுக்கவும்.

ஆரியர்களும் தமிழர்களும்!

(சில சிந்தனைக் குறிப்புகள்)

O ... இங்ஙனந் தாம்செய்த வெறியாட்டு வேள்விகளை அழித்தமை பற்றியே, இவ் வாரியர் பெருஞ்சினம் கொண்டு அவ் வேளாளரையும், அவருள் அரசரான வேளிரையும் தாசியர், இராக்கதர், அசுரர் என்று இகழ்ந்து கூறி, அவரைத் தாழ்த்துதல் பொருட்டுப் பொய்யான பல புராணக் கதைகளையும் எழுதி வைப்பாராயினர். — மறைமலையடிகள்.

'வேளாளர் நாகரிகம்' — பக் : 35.

O ஆரியப் பார்ப்பனர்கள் தேவையின் பொருட்டே தமிழைப் பயன்படுத்துகிறார்கள். அஃதாவது, ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வது போல. அவர்களுக்குச் சொந்த மொழியாகக் கருதப்பெறுவது சமசுக்கிருதமே. 'தமிழைவிட சமசுக்கிருதமே மேல்' என்பதே அவர்களின் முடிந்த முடிபு. ஆகையால் பார்ப்பனர்கள் தமிழரல்லர். — வயவர். ஏ. டி. பன்னீர்ச்செல்வம்.

வேலூர் சொற்பொழிவு : (27-12-38)

O இராமன் காலத்தில் தென் இந்தியா 'தஸ்யூக்கள் இராக்ஷஸர்களுக்குச் சொந்தமாயிருந்தது. (பழந்தமிழர்களைத்தாம் இவ்வாறு குறிக்கிறார்கள்.) இவர்கள் ஆரிய முனிவர்கள் செய்து வந்த யாகத்தை எதிர்த்தார்கள். ('அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத் துண்ணாமை நன்று'—என்னும் திருக்குறளையும் ஓர்க.) இருந்தாலும் வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர்களைப் போலவே இந்த 'இராக்ஷஸர்கள்' என்பவர்களும் நாகரிகமடைந்திருந்தார்கள். — பி. டி. சி. சீனிவாசய்யங்கார்.

'இந்திய சரித்திரம், முதற்பாகம்' — (பக் : 19)

O ஓ! இந்திரனே! இடியை வைத்திருப்பவனே! எங்களுடைய வேண்டுதலைக் கேள்! 'தஸ்யூக்க'ளின் மீது இடியைப் போடு! ஆரியருடைய வலிவையும் புகழையும் அதிகப்படுத்து!

— 'ரிக்வேதம்' —அதிகாரம்—1 (103:3)

O நம்மைச் சுற்றி நாலா பக்கங்களிலும் தஸ்யூக் கூட்டத்தார் இருக்கிறார்களே! அவர்கள் யாகம் செய்வதில்லை. அவர்கள் ஒன்றையுமே நம்புவதில்லை. அவர்களுடைய பழக்க வழக்கங்களே வேறுன்றியிருக்கின்றன. அவர்கள் மாந்தர்களே அல்லர். ஓ! எதிரிகளை அழிப்பவனே! அவர்களைக் கொல்லு; 'தஸா' வழியினரை அழித்து விடுவாயாக! — 'ரிக்வேதம்' அதிகாரம்—10 (52-8)

O ஆதிகாலத்துப் பிராமணர்கள் அரத்தத்தைத் தொடுவதில் அவமானப்படவில்லை. அவர்களுடைய கடவுள்களுக்கு விலங்குகளைக் கொன்று வேள்வி (யாகம்)செய்தார்கள்.— டி. சி. ஆலன்.

'இந்திய வரலாறு' — (பக் : 8)

O காடுகளிலிருந்த மக்கள் யாரென்பது இராமனுக்கும் அவனைச் சேர்ந்த ஆரியர்களுக்கும் தெரியாது. அழகில்லாதவர்களைக் 'குரங்கு'களென்று அழைத்தார்கள்; அவர்களிலேயே

மிகுந்த வலிவும் துணிவும் சாய்காலுமுடையவர்களை 'அரக்கர்'-களென்று அழைத்தார்கள். தென் இந்தியாவில் வாழ்ந்த (தமிழ்) மக்களே இப் பெயரால் அழைக்கப்பட்டார்கள்.

-விவேகானந்தர். சொற்பொழிவுகளும் கட்டுரைகளும்'
'இராமாயணம்' — (பக் : 587-589)

O ஆரியர்களின் ஒழுக்கக் கேடுகளிலேயே, குடிப்பதும், சூதாடுவதும் முகமையானவையாகும். இவை இரண்டையும் மெய்ப்பிக்க ரிக்வேதத்தில் அதிகச் சான்றுகள் இருக்கின்றன.

— ராகோசின்,
'வேதகால இந்தியா'

O இராமாயணக் கதையானது, புரோகித வகுப்பாருக்கும் போர் வீரர் கூட்டத்திற்கும் உண்மையாகவே நடந்த சச்சரவையும் சண்டையையும் குறிப்பதாகும். இச்செய்தியானது இலக்கிய உருவத்தில் உபநிடதங்களிலும் இருக்கிறது. இராமன் தென் இந்தியாவிலுள்ள ஆரியரல்லாத கூட்டத்தோடு நட்புக் கொண்டான். அவர்களே குரங்குகளென்றும், கரடிகளென்றும் வருணிக்கப்படுகிறார்கள்.

O இராமாயணக் கதைக் காலத்தில் தென் இந்தியா முழுவதும் ஆரியரல்லாதார் (தமிழர்) வாழ்ந்து வந்தார்கள். இவர்களைத்தாம் இராமாயணத்தின் ஆசிரியர் குரங்குகளென்றும், கரடிகள் என்றும், இலங்கையிலிருந்த ஆரியரல்லாத மக்களை அசுரர்களென்றும் வருணித்து எழுதி வைத்தார்.

— ரொமேஷ் சந்தர் தத், I. C.S., C. I. E.)
'புராதன இந்தியர்' (பக் : 52)

O ஆரியரல்லாத தேச மக்கள் காடுகளுக்குள் விரட்டப்பட்டார்கள். அதுவும் போதாதென்று அவர்கள் 'ராக்ஷசர்கள்' என்றும் அரக்கர்கள் என்றும் ஆரியப் புலவர்களும் ஆரியப்புரோகிதர்களும் நூல் எழுதி வைத்தார்கள். ஆரியரல்லாதவர்களுக்கு ஏற்கனவே இருந்த 'தஸ்யு' அல்லது பகைவர் (விரோதி) என்ற பெயர்கள் நாளடைவில் 'பிசாசு', 'பூதம்', 'ராக்ஷசன்' என்ற பெயர்களாக மாற்றப்பட்டு விட்டன.

— வயவர் வில்லியம் வில்சன் ஹண்டர், K. C. S. I. C. I. E., M. A. (Qxon), L. L. D. (கேம்பிரிஜ்)
இந்திய மக்களின் வரலாறு —(பக்: 41)

O திராவிடர்கள் (தமிழர்கள்) தங்கள் மீது படையெடுத்து வந்த ஆரியர்களோடு கடும் போர் புரிய வேண்டியிருந்தது; இத்தகைய சண்டைகளின் வேகத்தையும், கடுமையையும் குறிக்கக் கூடிய பல சொலவகங்களை ரிக்வேதத்தில் காணலாம்.

பர்: ரமேசு சந்தர் மசும்தார், M.A; Phd.
பேரா: டாக்கா பல்கலைக் கழகம்;
தொன்மை இந்திய வரலாறும் நாகரிகமும் (பக் : 22)

O வெற்றி பெற்றவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் அகங்

காரத்தில் பிராமணர்கள் தங்கள் பகைவர்களாகிய 'தஸ்யூக்' களைக் குரங்குகளென்றும், கரடிகளென்றும், ராக்ஷசர்கள்என்றும் எழுதி வைத்தார்கள். ஆனால், இவ்வாறு இழிவு படுத்தப்பட்ட வகுப்பார்களிடமிருந்து பல நாகரிகங்களை இப் பிராமணர்களே கற்றுக் கொண்டார்களென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

— ஜோஷி சந்தர் தத்,
இந்தியா—அன்றும் இன்றும். (பக் : 15)

O இந்தியாவின் தென்னாட்டிலுள்ள அரசுகளை நோக்கி வருவதில் பிராமணர்கள் வெற்றியடைந்ததும், அங்குள்ள ஆந்திரர், சேரர், சோழர், பாண்டியர் ஆகிய எல்லாருடைய அரசுகளும் மிக நாகரிகமான நிலையில் இருப்பதைக் கண்டார்கள்.

— வின்செண்ட் எ. ஸ்மித்,
ஆக்சுபோர்டு இந்திய வரலாறு: (பக் :14)

O ஆரியன் என்ற சொல் தங்களையும் தங்களைச் சேர்ந்தவர்களையும் இந்தியாவின் பழங்குடி (தமிழின) மக்களிடமிருந்து பிரித்துக் காட்டும் பொருட்டு, வேதப் பாடல்களை இயற்றியவர்கள் கொடுத்துக் கொண்ட பெயராகும். அப் பழங்குடி (தமிழின) மக்களைத் 'தஸ்யூக்க' ளென்றும் எழுதி வைத்தார்கள்.

கேம்பிரிஜ் 'பழைய இந்திய வரலாறு'—(பக்:14)

O இந்திய ஆரியர்களிடம் மாந்தர்களைக் கொன்று வேள்வி செய்யும் வழக்கமும் இருந்ததென்று உறுதியாகச் சொல்லலாம்.

இம்பீரியல் இந்தியன் கெஜட்டியர் பகுதி- 1(1909) — பக்:505.

O ஆரியரல்லாதவர்களை ரிக்வேதத்தில் 'தாசர்' என்றும், 'தஸ்யூக்கள்' என்றும், 'அசுரர்கள்' என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆரியருக்கும் ஆரியரல்லாதாருக்கும் இருந்து கொண்டிருந்த அடிப்படையான பகைமையைப் பற்றி ரிக் வேதத்தில் பல இடங்களில் காணலாம். இரு வகுப்பாருக்கும் இருந்த கலை வேற்றுமையும், அரசியல் வேற்றுமையுமே இந்தப் பகைமைக்குக் காரணமாகும்.

— ராதா முகுத் முகர்ஜி, M.A. Phd.
இந்திய வரலாற்றுப் பேராசிரியர், இலக்னோ பல்கலைக்கழகம்.
'இந்து நாகரிகம்' — (பக் : 69)

O இராமாயணக் கதையின் உட்பொருள் என்னவெனில், ஆரிய நாகரிகத்திற்குத் தலைவனும், அதை உணர்த்துபவனுமான இராமனுக்கும், ஆரியரல்லாத (தமிழின) நாகரிகத்திற்குத் தலைவனும் அதை உணர்த்துபவனுமான இராவணனுக்கும் நடந்த சண்டையேயாகும்.

(—ஷை — பக் : 141)

O ஆரியர்கள் தங்கள் மொழியைப் புகுத்த முடியாமற் போனதுமன்றி, அதற்கு மாறாக, ஆரியரல்லாதவர் (தமிழர்)களுடைய மொழியை (தமிழை)க் கற்றுக் கொண்டு, அவர்களுடைய நாகரிகத்தையும் பின்பற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

வயவர் — பண்டார்கர் (கட்டுரைகள்)
(பகுதி - 111; பக் : 10)

O தமிழர்கள் ஆரியர்களை 'வடவர்கள்' என்ற பொதுப்

பெயரால் அழைத்தார்கள்; உண்மையாகவே வடக்கேயிருந்து வந்தவர்களாதலால்.

— கிருட்டிணசாமி (அய்யங்கார்) M. A; Ph; d.
கல்கத்தா பல்கலைக் கழகம்,
தென் இந்தியாவும் இந்தியக் கலையும். (பக் : 3)

○ இராமாயணத்தில் குடிகாரர்களைச் 'சு ர ர் க ள்' என்றும் குடியை வெறுத்தவர்களை 'அசுரர்கள்' என்றும் வேறுபடுத்திக் கூறப்பெற்றிருக்கிறது. — என்றி சுமித் வில்லியம்சு. L. L. D.
'வரலாற்றாசிரியர்களின் உலக வரலாறு' பகுதி 11. (பக் : 521)

○ ஆரியர்கள் சூதாடுவதில் பித்துப் பிடித்தவர்கள்; பந்தயத்தில் தங்களுடைய மனைவிகளையும், அவர்களது சொந்த உரிமையையும் கூட பந்தயப் பொருளாக வைத்து விடுவார்கள்.
—வயவர். ஜார்ஜ் டன்பர்,
('இந்திய வரலாறு' (1935) பக் : 10)

○ ஆரிய வழியினரில் வேதமொழி (பின்னாளில் சமசுகிருதம்) பேசியவர்கள் மட்டும் இந்தியாவின் மேற்குக் கணவாய் வழியாக நுழைந்து, கிறித்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வடஇந்தியாவை அடைந்தார்கள். அங்குத் தங்களை விட முன்னேற்றமான நாகரிகமுடைய ஒரு கூட்டத்தாரை, அஃதாவது திராவிடர்(தமிழர்)களைச் சந்தித்து, அவர்களிடமிருந்து பல நாகரிகங்களைக் கற்றுக் கொண்டார்கள். —எச். ஜி. வெல்சு,
உலக வரலாற்றுச் சுருக்கம்; (1922) (பக் : 105)

○ வருணப் பிரிவுகள் நான்கில், அஃதாவது, பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர்—இவர்களில் முதல் மூன்று வகுப்பார்களும் ஆரியர்களைச் சேர்ந்தவர்கள்; கடைசி வகுப்பார் இந்தியாவின் தொன்மைக்குடி (தமிழின) மக்கள்.
The New Age EncycloPaedia—Vol; 11—1925; (பக்: 273.)

○ பிள்ளையில்லாமல் அந்தக் குலம் அழிந்து போகிறதாக இருந்தால் அப்போது அந்தப் பெண், தன் கணவன், மாமனார் முதலானவர்களின் இசைவு பெற்றுக்கொண்டு, தன் அளியன் (கணவன் தம்பி) அல்லது தன் கணவனுக்கு ஏழு தலைமுறைக், குட்பட்ட பங்காளி இவர்களோடு மேற் சொல்கிறபடி புணர்ந்து குலத்திற்குத் தக்கதான ஒரு பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம்.
—மநுதர்மம், (அத் 9; சுலோ. 58)

○ (இராமாயணம்,மகாபாரதம்)இரண்டும் ஆரியர்கள் பரவிய பருவங்களை மிகத் தெளிவாய்க் குறிப்பிடுகின்றன. மகாபாரதம் கங்கை ஆற்றுவெளியில் அவர்கள் பரவியதையும், இராமாயணம் தென் இந்தியாவை அவர்கள் கைப்பற்றியதையும் உணர்த்துகின்றன. C. J. வாக்கி M. A. வரலாற்றுப் பேராசிரியர்; மங்களூர்
'இந்திய வரலாற்றுப் பாகுபாடு'— (பக் : 15),

○ மகாபாரதக் கதையில் இடும்பி என்பவள் ஓர் ஆரியரல்லாத (தமிழினப்) பெண்மணி; அவள், தமிழ்த் தேசத்தின் உண்-

மைப் பெண், கதையெழுதிய பார்ப்பனப் புலவர்க்கு அவர்க்-குள்ள சாதி வெறுப்பின் முதிர்ச்சியில் இந்தப் பெண்மணியை ராக்ஷஸி என்ற பெயர் தவிர வேறு பெயரால் வருணிக்க முடியவில்லை. இந்தியாவில் மிகத் தொன்மைக் காலத்தில் கூட, வரலாற்றுக் காலத்திற்கு முன்பு கூட, மக்களைச் சாப்பிடக் கூடிய ராக்ஷஸர்கள் இருந்ததேயில்லை. இந்த 'ராக்ஷஸர்' என்ற கடு-அச்சப் புரளியானது வைதீகப் பார்ப்பனர்களின் மூளையில் தோன்றிய கற்பனையேயாகும்.

நாகேந்திர நாத் கோஷ். M. A., B. L. கல்கத்தா உயரறமன்றம்
'இந்திய ஆரியரின் இலக்கியமும் கலையும்' — (பக் : 194)

O சுருங்கக் கூறவேண்டுமானால், பிராமணர்கள் கல்வியைத் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டு, தங்களுடைய நிலைமை-யைத் தவறாகப் பயன்படுத்தித் தங்கள் விருப்பம்போல் எழுதிக் கொண்ட கட்டுக் கதைகளுக்கு எல்லாச் செய்திகளையும் உட்-படுத்தி வைத்தார்கள். இந்தக் கற்பனைக் கதைகள் அனைத்தும் வேண்டுமென்றே கெட்ட எண்ணத்துடன், கெட்டிக்காரத்தன-மாய்ப் பிறரை அழுத்தித் தங்கள் நிலைமையை உயர்த்திக் கொள்வதற்காகவே எழுதப்பட்டவையாகும்.

— ஹென்றி ஹவரிட்ஜ்,
'விரிவான இந்திய வரலாறு' முதற்பாகம். (1895)—பக் : 15)

O வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்துச் சில இலச்சினை-கள் (சின்னங்கள்) தவிர வடஇந்தியாவிலுள்ள திராவிடக்கலை நாகரிகம் அத்தனையும் ஆரிய வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்பட்டது. ஆனால், தென் இந்தியாவில் அவ்வாறு நடக்க வில்லை; நடக்க முடியவுமில்லை. இங்கு ஆரிய நாகரிகம் மிகப் பொதுவான முறையில்தான் பரவ முடிந்தது. அதனுடைய பேரலைகள் இங்குச் சிறு சிறு துளிகளாகச் சிதறடிக்கப்பட்டன.

கே. என். சிவராச(ப் பிள்ளை), க. இ.
தமிழ்ப் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்,
பண்டைத் தமிழர்களின் வரலாறு. (1932) —பக் : 4.

O இதிகாசங்களில் தென்னிந்தியாவைப் பற்றி எழுதும்போது காட்டு விலங்காண்டிகளும், ராக்ஷஸர்களும், தஸ்யூக்களும் வாழும் நெருக்கமான காடுகளைக் கொண்ட நிலப்பகுதி என்று கூறப்-பட்டிருக்கிறது. G. H. ராபின்சன், C. I. E.
'இந்தியா' (பக் : 155)

O இந்திய ஐரோப்பியர்களால் தோற்கடிக்கப்பட்ட கறுப்பு மாந்தர்களைத் தஸ்யூக்கள் என்றும், கொள்ளைக்காரர்கள் என்றும், அடிக்கடி பிசாசுகளாக மாறக் கூடியவர்கள் என்றும் வேத இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கிறது.—பால் மாஸின் அவர்ஸெல்,
'பழைய' இந்தியாவும் நாகரிகமும்' (1934) பக் : 19

O பொதுவாக ஒரு தமிழ்நாட்டுப் பிராமணன் தமிழைவிட இங்கிலீசில் சரியாகப் பேசுகிறான்; தமிழைவிட இங்கிலீசில் அதிக இயல்பாகவும், அதிக வேகமாகவும் பேசுகிறான்; தமிழைவிட

நாடகம்: தொடர்: 5

அத்திப்பூ

நாடக ஆக்கம்: -அதியமான்

(பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'பாவியக் கொத்'தில் ஒரு மலர்!)

காட்சி மாற்றம்

க.தோ (பாரதிதாசன் எழுதிய 'தமிழச்சியின் கத்தி' என்ற நூலைப் படித்துக் கொண்டிருக்கிறாள்)

கயல்: (தோழியின் முன்நின்று) என்ன கையில்? பொத்தகம் படிக்கிறாயா?

க. தோ: வா, கயல்விழி வா, ஆமாம்; பாரதிதாசன் எழுதிய "தமிழச்சியின் கத்தி" என்னும் நூலிது. படிக்கிறேன்;

கயல்: மிகக் கவனமாய்ப் படிக்கிறாயே, அப்படி என்னதான் இதில் உள்ளது?

க. தோ: என்ன உள்ளதா? தமிழர்கள் படிக்க வேண்டிய நூலல்லவா? (இருக்கை ஒன்றைச் சுட்டிக் காட்டி) இப்படி அமர்; நான் படித்துக் காட்டுகின்றேன்;

கயல்: நேரம் ஆகிவிட்டது. இதை நீ படித்துக் காட்டும் வரைக்கும் என்னால் இருக்க முடியாதே;

க. தோ: கேள். இராமாயணத்தில் வரும் இராமன், தன் மனைவியை இலங்கையிலிருந்து மீட்டான்; அவள் மேல் ஐயம் கொண்டான். அவளை நெருப்பில் குளிக்கக் கூறினான்;

கயல்: அது சரிதானே.

க. தோ: உன்னைப் போலப் பெண்கள் சிந்திக்காமல் இருந்தால், அப்படித்தானே சொல்வர். கேள், கயல். சீதை எவ்வளவு நாள் பிரிந்திருந்தாளோ, அவ்வளவு நாள் இராமனும் பிரிந்து தானே இருந்தான்; அவன் மேல் சீதைக்கு ஏன் ஐயம் பிறக்க

(முன் பக்கத் தொடர்ச்சி)

இங்கிலீசையே அடிக்கடி அதிகமாகப் படிக்கிறான்; சுருங்கச் சொன்னால், இங்கிலீசு மொழியைத் தன்னுடைய சொந்த மொழியாகவே ஏற்படுத்திக் கொண்டு விட்டான்;

—பர். கில்பர்ட் ஸ்லேட்டர், M. A., D. Sc.
முன்னாள் பொருளியல் பேராசிரியர், சென்னைப் பல்கலைக் கழகம்)
'இந்தியக் கலையில் திராவிடப் பகுதிகள்' (பக் : 62

(பாவலரேறு அவர்களின் 'திருக்குறள் தொடர் சொற்பொழிவு' சிறப்பு மலர், 1986—தைப்பிங்—மலேசியா.)

வில்லை. அவனையும் நெருப்பிற்குள் போய்வரக் கூற வேண்டியது தானே. கூற வேண்டுமா? வேண்டாவா?

கயல்: பெண்களுக்குத்தான் அந்த உரிமை இல்லையே!

க. தோ: எவன் தான் உரிமையைத் தருவான், நாம்தாம் பிடித்துஇழுக்க வேண்டும். இன்னும் கேள். மகாபாரதத்தில் பாஞ்சாலிக்கு 5 கணவர்களாம். அந்த முட்டாள்கள் பெண்ணைச் சூதாடி துரியோதனனைத் துயிலுரிக்க வைத்தானே; எந்தப்பெண்ணுவது 'அந்தக் கதை அருவருப்பானது' அதைப்படிக்காதே என்று கூறினது உண்டா? இந்த நாட்டுப் பெண்கள் எல்லாரும் தொலைக் காட்சியில் காட்டும் போது ஓடி ஓடிப் பார்த்தார்கள், அதற்கெல்லாம் நேரம் கிடைக்கும், என்ன? பகுத்தறிவுக் கருத்துகளைக் கொண்ட பாவேந்தரின் 'தமிழச்சியின் கத்தி' நூலைக் கேட்க நேரம் கிடைக்கவில்லை; தமிழைப் படிக்க நேரம் இல்லை; கேட்க முடியவில்லை. அப்படித்தானே! அதனால்தான் தமிழன் தாழ்ந்து கொண்டே போகிறான்.

கயல்: (புன்முறுவல் பூத்து) சரி, சரி இந்தப் பொத்தகத்தில் என்ன எழுதி இருக்கிறது? அதைச் சொல் முதலில்;

க. தோ: சொல்லுகிறேன் கேள். தமிழச்சியின் கையில் கத்தி இருக்க வேண்டுமாம்.

கயல்: என்ன? கத்தியா?

க. தோ: ஆமாம். கத்தி தான்;

கயல்: கத்தியை வைத்துக் கொண்டு என்ன செய்ய வேண்டும் என்கிறாய்?

க. தோ: ஆண்கள் எவனும் பெண்களைக் கற்பழிக்க அல்லது திருட வந்தால் ஒரே குத்தாகக் குத்தித் தள்ளிவிட வேண்டும்;

கயல்: (சிரித்து) இந்தப் புரட்சிப் புலவர் பாக்களைப் படித்தாலே இப்படித்தான் எண்ணம் வரும். ஏனென்றால் அவர் புரட்சிப் பாவலர் அல்லவா? ஏண்டி இந்தப் பொத்தகத்தில் என்னதான் சொல்லி இருக்கிறது, அதைச் சொல்லேன்;

க. தோ: நன்றாகக்கேள்; செஞ்சி என்ற பாளையப்பட்டு தேசிங்கு என்ற வடக்கனுடைய வல்லாளுமைக்குள் இருந்தது; அவனுடைய படையில் ஒரு படைத்தலைவன் (சுபேதார்) பெயர் சுதர்சன்சிங், இந்தப் பயல் ஒருநாள் புதுச்சேரிப்பக்கம் வந்தானாம்; வளவனூர் என்ற ஊர் வழியாக வரும் போது ஒரு தென்னந்தோப்பைக் கண்டு உள்ளே போனானாம்; அவனோடு அவன் தோழன் இரஞ்சித்சிங்கும் சேர்ந்துபோய், அங்கிருந்த தமிழன் திம்மனிடம் இளநீர் கேட்க, திம்மனும் கொடுத்து அவனை வரவேற்று வீட்டுக்கும் அழைத்துச் சென்றானாம்;

கயல்: நல்லதுதானே, வந்தவனை வரவேற்கத்தானே வேண்டும்;

க. தோ : நல்லதா? கதையைக்கேள். வீட்டிற்குப் போனவுடன் திம்மனுடைய மனைவி சுப்பம்மாள் கணவன் பேச்சைக் கேட்டு அந்த இரண்டு நாய்களுக்கும் சுவையோடு சோறு போட்டாள்.

கயல் : ஏன்டி! வடக்கத்தியானைப் பயல், நாய் என்று மதிப்பு இல்லாமல் பேசுகிறாய்?

க. தோ : பின்னே என்ன? அந்த சுதர்சன்சிங் சுப்பம்மாளைக் கண்டு மயங்கி அவளை எப்படியாவது கவர்ந்து கொள்ளத் திட்டம் போட்டான்.

கயல் : உண்ட வீட்டிலேயே பெண்டியைத் தூக்கும் அறிவிலி, பிறகு?

க. தோ: சுப்பம்மாளின் கணவனை முதலில் ஏமாற்றினான்.

கயல்: எப்படி?

க. தோ: திம்மா, திம்மா உனக்கு நம் படையில் ஒரு வீரர்பதவி வாங்கித் தருகிறேன். என்னோடு உன் மனைவியையும் கூட்டிக் கொண்டு செஞ்சிக்கு வருகிறாயா? என்று கொஞ்சலாகக் கேட்டானாம்.

கயல்: திம்மன் சரி என்றானோ?

க. தோ: தமிழனுக்குப் பதவி தருகிறேன், பணம் கிடைக்கும் என்றால் போதுமே ஏமாறி விடுவானே; சரியென்று மனைவியோடு புறப்பட்டு விட்டான்.

கயல்: மனைவியிடம் திட்டத்தைப்பற்றிக் கூறவில்லையோ?

க. தோ: எப்படிக் கூறுவான்? ஆண் என்ற திமிறில் பெண்களுக்கு என்ன தெரியும் என்ற தீ நோக்கம்!

கயல்: ங். சரி பிறகு?

க. தோ: சுப்பம்மாளை, அந்த சுதர்சன்சிங்கின் விலைமகளிரிடம் ஒப்படைத்து விட்டுத் திம்மனைக் கூட்டிக் கொண்டு போய் ஓர் அறையில் பூட்டி வைத்து விட்டான்.

கயல்: சுப்பம்மாள் என்ன ஆனாள்?

க. தோ: சுப்பம்மாள் அழுதாள், துடித்தாள், துவண்டாள்; கணவனைக் காணாமல் கலங்கி இருந்தாள். கருத்து இழந்தாள், அந்த விலை மாதர்களிடம், என் கணவர் எங்கே? என்று கேட்டாள். ஒரு விடையும் இல்லை. கணவனும் வரவில்லை.

கயல்: வடநாட்டில் இருந்து இங்கு வந்து இருந்து கொண்டு எவ்வளவு துணிச்சல்? ஒரு தமிழ்ப் பெண்ணைக் கற்பழிக்கப் பண்ணும் சூழ்ச்சியைக் காணமுடியாமல் ஏமாறி செம்மறிக் கிடாக் கொம்பு மாதிரி மீசை வைத்துக் கொண்டு தமிழன் அலைகிறான். இராப்பாடிக் கூட்டம்! ஏன்டி, சுப்பம்மாளின் கணவன் என்ன ஆனான் என்று அவளுக்குத் தெரியாதா என்ன?

க.தோ: தெரியாது. கதையை நன்றாகக் கேட்கிறாயா? இப்படி இருக்கும் போது அந்த வடக்கன், ஏமாற்றுக்காரன் சுப்பம்மாள் இருக்கும் விலைமகளிர் வீட்டிற்குவந்து சுப்பம்மாளைக் கற்பழிக்கத் திட்டம் போட்டான்.

கயல்: ஐயோ. ஆமா, அந்த விலைமகளிர் நம் தமிழச்சிதானே?

க.தோ: தமிழச்சிதான். பணத்திற்காக உடலை விற்கிறவளாச்சே. சுப்பம்மாளைக் கற்பழிக்க வந்தபோது, அவள் மறுக்கவே அவள் இருந்த ஓலைக் குடிசைக்குத் தீ வைத்து விட்டான், அந்த வடநாட்டுக்காரன்.

கயல்: ஐய்யய்யோ! சுப்பம்மாள் நிலை என்ன ஆனது?

க.தோ: அங்கிருந்துத் தப்பித்து ஒரு சேரி வாழ் மக்களிடம் போய்ச் சேர்ந்தாள். அங்கு செங்கான் என்பவனுடைய அடைக்கலத்தில் இருந்தாள். அவர்களிடம் செய்தியைச் சொன்னாள். அவர்கள் சுப்பம்மாளைப் பாதுகாப்பாக வைத்துக் கொண்டார்கள். அதையும் அறிந்த அந்த வடக்கன் சுதர்சன்சிங் வீரர்கள் சிலரை அனுப்பி செங்கானை மிரட்டி அவளுக்கு அடைக்கலம் கொடுக்கக் கூடாது என எச்சரித்தான்.

கயல்: செங்கான் அஞ்சிவிட்டானோ?

க.தோ: செங்கான் எதிரிகளாகிய வடநாட்டுக் காரனுக்குக் கூட அஞ்சவில்லை. காட்டிக் கொடுக்கிறானே தமிழனைத் தமிழன், அந்தத் தமிழனுக்குத்தான் அஞ்சி ஒதுங்கி விட்டான்.

கயல்: எதிரிகளைத் தொலைப்பதற்குமுன், தமிழனைத் தமிழன் காட்டிக் கொடுக்கிறான் அல்லவா? அந்த இரண்டகர்களைத்தான் முதலில் களை எடுக்க வேண்டும்.

க.தோ: அப்படிச் செய்தால்தான் எதிராளியைத் தொலைக்க முடியும். கேள் கதையை.

கயல்: கதையா இது. நாட்டில் இப்படித்தானே நடக்கிறது. பதவி ஆவலில் மானத்தை விற்றுவிட்டு நல்ல மனைவியை தொல்லைக்குள் நிலைப்படுத்தி விட்டானே! அதன்பின் என்ன ஆயிற்று?

க.தோ: அந்த விலைமகள் மூலம் நஞ்சு உணவைக் கொடுத்து சுப்பம்மாளை மயக்கி சுதர்சன்சிங் கற்பழித்தே விட்டான்.

கயல்: (கையால் வாயைப் பொத்தி) ஆ! கற்பழித்தே விட்டானா? வடநாட்டுக் காரன் தமிழச்சியைக் கற்பழித்து விட்டான். அதற்குத் துணைநின்றவளும் தமிழச்சி. என்ன கொடுமை? இதைக் கேட்கவே உள்ளம் பதறுகிறதே. பணமும் பதவியும்—தமிழச்சியின் கற்புக்கு ஈடாகுமா? இந்த வடநாட்டுப் பயலுக்கு எவ்வளவு துணிச்சல்!

க.தோ: துணிச்சல் வராமல் என்ன செய்யும்? வடக்கன் போடும் எச்சில் எலும்புக்குக் காத்துக் கிடக்கும் இழி தமிழர்

இருக்கும் போது, அவன் இதுமட்டுமா செய்வான்? பதவிக்கு நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டலைவாரின் வீட்டுக்குள்ளும் போய் இருந்து கொள்வான்.]உரிமையும் கொண்டாடுவான்.

கயல்: ஆமாம்! ஏன்டி, நீ சொன்னயே முதலில் தமிழச்சியிடம் கத்தி வேண்டும் என்று-சுப்பம்மாளிடம் கத்தி இல்லையோ?

க.தே: கத்தி வைத்திருந்தாள்.

கயல்: அதை வைத்துக் குத்தவேண்டியதுதானே

க.தோ: குத்தி இருப்பாள். மயக்கி விட்டார்களே.

கயல்: மயக்கம் தெளியவே இல்லையோ?

க. தோ: மயக்கம் தெளிந்ததும், கத்தியை எடுத்தாள்; ஒரே குத்து ஓங்கி குத்தினள். அந்த வடநாட்டுக்காரன் செத்தான்.

கயல்: அதுதான் சரி. திம்மனுக்கு இது தெரியுமா?

க.தோ: படைவீரன் செத்தது தேசிங்கு மன்னனுக்குத் தெரிந்தது. அவன் திம்மனை இழுத்துக் கொண்டு வந்து சுப்பம்மாளைக் காட்டச் சொன்னன். திம்மனைக் கண்ட அவனுடைய மனைவி அத்தான் என்று அலறினள். அவளைப் பிடித்து தேசிங்கு வன்கொலை செய்யச் சொன்னது எப்படித்தெரியுமா? சுப்பம்மாளை மரத்தில் கட்டி வைத்து ஒரு கையை முதலில் வெட்டுங்கள். மறுநாள் ஒருபக்க மார்பை வெட்ட வேண்டும். மூன்ரும் நாள் முதுகுத் தோலைக் கிழித்து உரித்து எடுத்துவிட்டு மூக்கை அறுத்து விடுங்கள். அடுத்து ஒருகாது பின்பு ஒருகை இப்படியாக இந்தத் தமிழச்சியின் உடல் முழுவதையும் ஒவ்வொன்ருக வெட்டிப் பின் கொதிக்கும் வெண்ணீரை விட்டு துடிக்கத் துடிக்க அடித்துக் கொல்லுங்கள் என்று ஆணையிட்டான்.

கயல்: எத்தனை கோடித் தமிழர்கள் வாழ்கிருர்கள், இங்கு! ஒருவரும் ஒன்று செய்ய வில்லையா? துடிக்க வில்லையா?

க.தோ: (சிரித்து) கயல் இது கதை.

கயல்: ஓகோ. ஆமாம். ஆமாம். கதை மாதிரியே தெரியவில்லை.

க.தோ: கயல், உனக்கு அரத்தம் துடிக்கிறது. கதையைக் கேட்டதும் உணர்ச்சி பொங்குகிறது. உண்மையாக இவ்வாறு வடக்கன் செய்தாலும் மூச்சுவிடாத தமிழர்களும் இருக்கிருர்கள். தமிழனுக்கு வடவனல் நடக்கும் கேட்டை ஏன் என்று கேட்காமல் இருக்கும் அடிமைகள் இங்குப் பலர் உண்டு. வடக்கனுக்குத் தமிழர் அடிமைகளாக இருப்பதைக் கூட உணராமல் இருக்கிறவன் எப்படித் துடிப்பான்?

கயல்: அப்படியானல் சுப்பம்மாளை அப்படியே வன்கொலை செய்தார்களோ?

க.தோ: அவர்கள் அப்படிச் செய்வதற்குள் மூர்ச்சையாகிக் கீழே விழுந்து உயிரை விட்டு விட்டாள்.

கயல்: அப்படியானல் திம்மன்?

க.தோ: அவன் என்ன ஆனால் என்ன? பதவிக்காகத் தன் மனைவியை வடநாட்டுக்காரனைக் கற்பழிக்கவிட்ட கோழை. இவன் போன்ற கோழைகள் தமிழ்நாட்டில் வாழக்கூடாது; வாழவிடவும் கூடாது.

கயல்: நேரம் மிகுதியாகி விட்டது. இருள் சூழ்ந்து விட்டது. (எழுந்து) நான் வீட்டிற்குப் போகிறேன்.

க.தோ: சரி போய் வா. கயல் எச்சரிக்கை உணர்வோடு போகவேண்டும். முன் பின் பார்த்துச் செல் புரிகிறதா?

கயல்: ஆகட்டும், அப்படியே போகிறேன் (சிறிது வழி நடந்த போது)

(கயல் விழிக்குப் பின் ஒருவன் மறைந்து மறைந்து அவளைப் பின் தொடர்ந்து அவள் போகும் வழியே போகிறான்.)

கயல்: (திரும்பிப் பார்க்கிறாள். ஆள் அடையாளம் தெரியாதவன் ஓர் உருவம் வருவதைக் கண்டு விரைவாக நடக்கிறாள்.)

அவன்: (ஓடிவந்து கயல்விழியின் வாயை ஒருகையால் பொத்துகிறான.)

கயல்: கத்துகிறாள்: யார். நீ?

அவன்: மூச்! பேசினயானல் பொல்லாதவனவேன். (கயல் விழியின் வாயை அவன் கைகளால் பொத்தித் கீழே தள்ளி விட்டான்.)

கயல்: (திமிறிப் பார்க்கிறாள், முடியவில்லை)

(வந்தவன் கயல் விழியைக் கற்பழித்துவிட்டு ஓடுகிறான்)

கயல்: (எழுந்து நின்று) ஏ, அறிவுகெட்ட ஆண்கூட்டமே! தாய்க் குலத்தை மதிக்காமல் மறச்செயலைச் செய்யும் கயவர்களே! என்னைக் கெடுத்துவிட்டாயே! சரி சரி! என் உயிரைக் குடித்து விட்டாயே. என் வாழ்விற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு ஓடுகிறாயே. திருட்டு நாயே! நில்லடா நான் வருகிறேன். தமிழச்சி கத்தி வைத்துக் கொள்ளவேண்டும் என்ற பாவேந்தரின் கதையை இப்போதுதானே கேட்டேன். (அழுகிறாள்) இந்தக் குமுகாய நிலையை அறிந்துதான் அப்படிச் சொல்லி இருக்கிறார். (அவனைப் பின் தொடர்ந்து ஓடுகிறாள்.)

(அவன் தள்ளி நின்றுகொண்டு) கத்தாதே வீடுபோய்ச் சேர் நடக்கிறான்).

கயல்: (விரைவாக நடந்து கண்ணீரைத் துடைத்து) நில்லுடா வெறியா உன்பல்லை உடைக்கிறேன். கோழைப் பயலே! (ஓடுகிறாள் அவனை நோக்கி)

(அவன் ஓடுகிறான் திரும்பிப் பார்த்து) கத்தாதே, இருண்ட

நேரம் ஒருவரும் இல்லை இங்கு. உன்னைக் காக்க வேண்டுமானாலும் நான்தான் இந்த இடத்தில் நிற்கிறேன்.

கயல்: என் கற்பைக் களவாடி விட்டாயடா வெறியா! (அழுகிறாள்)

அவன் : அது என்ன கற்பு?

கயல்: கற்பு என்பது தெய்வத் தன்மையுடையது.

அவன்: ஆகா: ஆகா! அப்படி அதற்கொரு வன்மை இருந்தால் உன்னைக் கட்டி அணைக்கும்போது சுட்டு இருக்கலாமே.

கயல்: நீ யாரென்று சொல்; உன்னைச் சுட்டு எரிக்கிறேனா இல்லையா பார்!

அவன்: மூடமே! திருடுகிறவன் எவனாவது பெயரைச்சொல்லுவானா? வீடுபோய்ச் சேர். யாரிடமும் சொல்லாதே: இழுக்கு எனக்கன்று; உனக்கே: ஏனென்றால் நீ பெண். உன்னைத்தான் கற்பிழந்தவள் என்று பழிப்பர்; என்னையன்று; ஏனென்றால் நான் ஆண்.

கயல்; ஆணுக்கென்று ஒரு ஞாயம் பேசும் குமுகாயமாக இருப்பதால் தானே துணிந்து இத் தீச்செயலை செய்து விட்டாய்! ஏன் போய்க் கொண்டிருக்கிறாய்? நின்று பேசு கோழையே. ணீரை முந்தானையால் துடைக்கிறாள்)

அவன்: நான் கோழையல்லன்; இந்த நிகழ்ச்சியை யாரும் பார்த்துவிடக் கூடாது என்பதற்காகவே ஓடுகிறேன்; பாதுகாப்பு எனக்கன்று; உனக்காக.

கயல்: உயிருக்கும் மேலான என் கற்பை என்னைவிட்டுப் பிரித்து அழித்து விட்டாய்; இனி நான் உயிரை விட்டுவிடுவேன்; எனக்கேன் பாதுகாப்பு, கயவா?

அவன்: ஏன் பின்னாலே பேசிக் கொண்டு வருகிறாய்? இனி என்னமும் செய்ய முடியாது.

கயல்: ஒன்றும் செய்ய முடியாது என்பதால் தானே, மாந்த நேயங்கூட இல்லாமல் என்னைச் சுட்டு விட்டாய் மட்டிப்பயலே.

அவன்: நான் மாந்தன்தானே!

கயல்: கயவன் நீ; மாந்த உருவில் திரியும் ஆவின்தோலைப் போர்த்திய புலி; கெட்டவன்; நல்லவனா நீ?

அவன்: ஒரு நல்லவனைத் தேடிக் கொள்,

கயல்: ஆம்; நான் சாகமாட்டேன்: ஒரு நல்லவனிடம் இதைச் சொல்லிவிட்டு என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன்.

அவன்: அதைச் செய்; (ஓடியே விட்டான்)

கயல்: (வீடு வந்து சேர்கிறாள்; யாரிடமும் இதைக் கூறவில்லை)

(திரை) (தொடரும்)

செய்திகள்

(இதழில் போதிய இடமின்மையாலும், இதழ்கள் காலந்தாழ்ந்தே வெளிவந்து கொண்டிருப்பதாலும், நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகளையும் காலந்தாழ்ந்தே வெளியிட வேண்டியிருக்கிறது. எவ்வாறேனும் நிகழ்ச்சிகள் பற்றி அன்பர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இவை வெளியிடப் பெறுவதால், காலந் தாழ்ந்து வெளியிடுவது பற்றிக் கவலைப்பட வேண்டா என்று கேட்டுக் கொள்கிறோம்.)

1. ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்துக் கறுப்புக்கொடி ஊர்வலமும் கண்டனக் கூட்டமும்!

சென்ற 18-7-90 மாலை 6மணியளவில், தமிழர் தேசிய இயக்கம், பாட்டாளி மக்கள் கட்சி, இந்திய மக்கள் முன்னணி, எம். சி. பி. ஐ., உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், அறிவியக்கப் பேரவை, விடுதலைக் குயில்கள், முற்போக்கு இளைஞர் அணி முதலிய இயக்கங்கள் ஒன்றிணைந்து, ஈழத் தமிழர் படுகொலைகளைக் கண்டித்தும், விடுதலைப்புலிகளை இந்திய அரசு ஏற்பிசைவு செய்யக் கோரியும், ஒரு கறுப்புக் கொடி ஊர்வலத்தையும், கண்டனப் பொதுக் கூட்டத்தையும் சென்னையில் நடத்தின.

ஊர்வலம் அன்று மாலை 5 மணியளவில் சென்னை தேனாம்பேட்டை, போக்குவரத்துச் சைகை விளக்கிலிருந்து புறப்பட்டு 7-30 மணியளவில் மயிலாப்பூர், மாங்கொல்லையை அடைந்தது. ஊர்வலத்தில் ஏராளமான ஆடவர், பெண்டிரான பொது மக்களும், மேற்படி இயக்கங்களின் அன்பர்களும் கலந்து கொண்டு, கோரிக்கை முழக்கங்களை எழுப்பிக் கொண்டு சென்றது எழுச்சியாகவும் குறிப்பிடத் தக்கதாகவும் இருந்தது.

மாலை 8 மணியளவில் மயிலை, மாங்கொல்லையில் நடந்த பொதுக் கூட்டத்தில் மேற்படி இயக்கத் தலைவர்கள் அமைப்பாளர்கள் ஆகிய பழ. நெடுமாறன், பேரா. தீரன், பாவலரேறு பெருஞ்சித்திரனார், இரா. நாராயணன், பெ. மணியரசன், பேரா. சாலை இளந்திரையன், பேரா. சுப. வீரபாண்டியன், துரைசிங்கவேல், குபேந்திர குணபாலன் முதலியோர் கருத்துரையாற்றினர். நிகழ்ச்சி இரவு 12 மணியளவில் நிறைவுற்றது.

2. தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை நடத்திய நெல்லை, மாநாடு.

சென்ற 22-7-90-இல் திருநெல்வேலி, நகராட்சி அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில், காலை 10 மணியளவில், தமிழ்நாடு இளைஞர் பேரவை, மாணவர் பேரவை சார்பில், 'தமிழ்வழி படித்தவர்க்கே வேலை வாய்ப்பு வலியுறுத்த மாநாடு நடை

பெற்றது. தொடக்கத்தில் அதியமான் (உ. த. மு. க.) வரவேற்புரையாற்றினர். குணத்தொகையன் (த. நா. இ. பே.) தலைமையேற்றார். திருவாளர்கள் பாலமுருகன், சாகிர் உசேன், ஆ. தமிழ்க்கனல், மா, இள. இளவரசன், மைக்கேல், பொன். பசுங்கிளி, தனசேகர், திருச்செல்வம். சியாவுதீன் அகமது (த. தே. இ.), பேரா. சுருளிவேல், பேரா. வளனரசு ஆகியோர் மாநாட்டின் நோக்கத்தை நன்கு வலியுறுத்தி விளக்கிப் பேசினர்.

பிற்பகல் 3 மணியளவில் தமிழ் வழிக் கல்வி கற்றவர்க்கே முதல் வாய்ப்புத் தருதல் வேண்டும் என்பதை மறுத்தும், ஏற்றும் வழக்காடு மன்றம் நடைபெற்றது. புலவர் இறைக்குருவனாரும், புலவர் தமிழ்மாறன் அவர்களும் வழக்காடினர். தீர்ப்பு, கொள்கையைச் சரி என்று அளிக்கப் பெற்றது.

இடை வேளையில் நெல்லை அதியமான்-செல்லத்தாயம்மாள் குழுவினர் பாவேந்தரின் தமிழச்சியின் கத்தி என்னும் வில்லிசையை நிகழ்த்தினர். பின்னர் நடைபெற்ற கருத்தரங்கில் புலவர் இறைக்குருவனார் மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

கருத்தரங்கிற்கு சுகுமாரன் (த. இ. பே.) தலைமை தாங்கினார். கருத்தரங்கில் மா. பொழிலன் (த. இ. பே.), அசுவகோசு (இ. மா. பொ.க.), மார்க்சு (ம. க. இ.), புலவர் வே. தமிழ்மாறன், பாவலரேறு பெருஞ்சித்திரனார் (உ. த. மு. க.) ஆகியோர் தமிழ்வழிக் கல்வி வரலாறு பற்றியும், தமிழ் நாட்டில் தமிழைப் படித்தவர்க்கே அரசு வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரவேண்டும் என்றும், அப்படித் தர அரசு முன்வரவில்லையெனில் மாபெரும் போராட்டம் நடத்தப்பெறும் என்று அரசை எச்சரித்தும் பேசினர். முடிவில் ஆ. தமிழ்க் கனல் நன்றி தெரிவிக்க நிகழ்ச்சி இரவு 8 மணியளவில் நிறைவுற்றது.

3. தமிழ் மக்கள் பேரணி-பொதுக் கூட்டம்.

கடந்த 28-7-90 காரிக்கிழமை மாலை 6 மணியளவில், சென்னை தமிழ்வழிக் கல்வி இயக்கம் சார்பாக, தமிழ் மக்கள் பேரணியும், பொதுக் கூட்டமும், நடைபெற்றன. பேரணியில் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும், உவமைப் பாவலர் சுரதாவும், பேரா. சாலை இளந்திரையனும் முன்னே செல்ல, அவர்களைப் பின்தொடர்ந்து பேரா. சாலினி இளந்திரையன், பேரா. இராமநாதன், இரா. முத்துக்குமாரசாமி, அ. மாயவன். வேலா. அரச மாணிக்கம், பெரும்பாக்கோ வா.மு. சேதுராமன், முனைவர் பொற்கோ, மருத்துவர் டொமினிக் சாமிநாதன், ந. அரணமுறுவல், புலவர் த. சுந்தரராசன் முதலியோரும் அவர்களைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான இளைஞர்களும், பெரியோர்களும், பொதுமக்களும் அணிநடையிட்டு நடந்து சென்றனர். பேரணி சிம்சன் அருகில் உள்ள பெரியார் சிலையிலிருந்து தொடங்கி, அண்ணா சாலையில் உள்ள தேவநேயப் பாவாணர் நூலகம் வரை சென்று, அந்நூலகக் கருத்தரங்கை அடைந்து பொதுக் கூட்டம் ஒன்றை நிகழ்த்தியது.

கூட்டத்திற்கு வேலா. அரசமாணிக்கம் தலைமை தாங்கினார். கூட்ட முன்னவர்கள் தமிழ்வழிக் கல்வியின் கட்டாயத்தை வலியுறுத்திப் பேசினர். கூட்டம் அரங்கு நிறைந்திருந்தது. இரவு 10 மணியளவில் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

4. ஈழத் தமிழர்க்கு ஆதரவு உண்ணா நோன்பு:

சென்ற 23-8-90 வியாழன் காலை 8 மணிமுதல் மாலை 6 மணி வரை, ஈழத் தமிழர்க்கு ஆதரவாகவும் தமிழகத் தமிழாசிரியர் கழகம், தலைநகர் தமிழ்ச் சங்கம், தமிழர் பாசறை, பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், தமிழ் ஆராய்ச்சியாளர் பேரவை, தமிழ் வளர்ச்சிப் பேரவை, கருணாநிதி நகர் இலக்கிய வட்டம், பாவேந்தர் பாசறை, பெரியார் நூலக வாசகர் வட்டம், அம்பத்தூர் இலக்கியப் பேரவை, பாவேந்தர் ஆய்வரங்கம், புத்தொளி ஆராய்ச்சிக் கழகம், முகம் வாசகர் வட்டம், தென்கலை வளர்ச்சிக் குழுமம், குறளாயம் திருக்குறள் பேரவை, அண்ணாநகர் தமிழ்ச்சங்கம், உரத்த சிந்தனை, தமிழர் முன்னேற்றக் கழகம் தமிழ் நெறிக் குடும்பம், தமிழர் கழகம், பாவேந்தர் பகுத்தறிவுப் பாசறை முதலிய சென்னையில் உள்ள இயக்கங்கள் சார்பாகவும், சென்னை, தியாகராய நகர், பனகல் பூங்கா அருகில் உண்ணா நோன்பு மேற்கொள்ளப் பெற்றது. இவ்வுண்ணா நோன்பில் நூற்றுக்கணக்கான தமிழீழத்தைச் சேர்ந்த அறிஞர்கள் பேரா. சச்சிதானந்தம், ஈழவேந்தன், தங்கத்துரை. நமச்சிவாயம் முதலியோரை உள்ளிட்ட பெரியோர் களும், தமிழீழப் பெண்டிரும் தமிழகத் தமிழர்களும் கலந்து கொண்டனர்.

மாலை 6 மணியளவில் உண்ணா நோன்பினைப், பாவலரேறு பெருஞ்சித்திரனார், பழ. கருப்பையா, பெரும்பாக்கோ வா.மு. சேதுராமன், புலவர் த. சுந்தரராசன், மணவைத்தம்பி ஆகியோர் கருத்துரையாற்றி நிறைவு செய்தனர்.

5. அதியமான் — அம்மு நீடு வாழ்க:

கடந்த மடங்கல் (ஆவணி) 10 (26-8-90) ஞாயிறு காலை 7 மணியளவில், நெய்வேலி சு சி. சாரங்கபாணி-சரோசா இணையரின் மூத்த மகன் செல்வன் சி.சா. அதியமான் என்பவர்க்கும், ஆ. சின்னத்தம்பி-விமலா இணையரின், மூத்தமகள் செல்வி. அம்மு என்கிற சசிரேகா விற்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையிலும், நெய்வேலி நிலக்கரி குழும ஆளுமை நெறியாளர் கோ. செகன்னாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வே. குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையிலும், தமிழ்த் திருமணம் இனிதே நடந்தேறியது.

மணமக்களை வாழ்த்தி, நகர திராவிடர் கழகத் தலைவர் வெ. செயராமன், முதன்மைப் பொறியாளர் இ.நா. வெற்றியரசு, பாவலர் இளஞ்சித்திரன், இலக்கிய அணிச் செயலர் கரு. தியாகராசன், பொன்ஆனந்தராசு, கோ. இராமகிருட்டிணன் ஆகி-

யோர் நல்லுரையாற்றினர்; இறுதியில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சித்துறை அ. இரமணன் நன்றியுரையுடனும், இனிய விருந்துடனும் நிகழ்ச்சி நிறைவுற்றது.

6. இர. சாம்பசிவம்— கு. வச்சலா நீடு வாழ்க :

சென்ற மடங்கல் 14 (30-8-90) வியாழன்று காலை 8 மணியளவில், புதுவை, உழவர் கரை திரு. வேங்கடேசுவரா திருமண மண்டபத்தில், மூலக்குள அரங்கசாமி-முருகம்மாள் இணையரின் மகன் செல்வன். இர. சாம்பசிவத்திற்கும், நெமலி குப்புசாமி-காசியம்மாள் இணையரின் மகள், செல்வி வச்சலா விற்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையிலும் மூ. இராசன் (எ) வாழுமுனி அவர்கள் முன்னிலையிலும் இனிதே தமிழ்த்திருமணம் நடைபெற்றது. வானூர் சட்ட மன்ற உறுப்பினர் அ. மாரிமுத்து, வானூர் பெருந்தலைவர் ந. சங்கர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பி-னர் முத்துவேல் ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். இறுதியில் ப்ளோபர்வெனார் அவர்களின் நன்றி உரைக்குப் பின்னும் இனிய விருந்திற்குப் பின்னும் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது.

7. பழனியப்பன் - பூம்பாவை நீடு வாழ்க!

சென்ற தி.பி. 2021. மடங்கல் (ஆவணி) 10-ஆம் நாள் (26-8-90) ஞாயிறு, தென்மொழியின் நெடுநாளைய பேரன்பரும், புரக்குநரும், நெய்வேலி முகவரும் ஆகிய சுப, நாராயணன் என்ற திருமாறன் - ஆண்டாள் இணையரின் அருமை மகள், செல்வி பூம்பாவைக்கும், ஆத்தங்குடி ப.க.பெ. பழ. பெரிச்சியப்பர்-நாச்சம்மை இணையரின் மகன் செல்வன் திருஞானம் என்னும் பழனியப்பனுக்கும், கண்டர மாணிக்கத்தில் பேரா. சொ. முத்தையனார் அவர்கள் தலைமையில் திருமணம் நிறைவுற நடைபெற்றது.

இத் திருமண விழாவின் வரவேற்பு நிகழ்ச்சி நெய்வேலி, நகர்க்கூறு-10, தமிழர் பண்பாட்டுக் கழகத்தில், கடந்த 9-9-90 ஞாயிறு அன்று நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தித் 'தமிழர் வாழ்வியல்' என்னும் தலைப்பில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் இன்னுரை நிகழ்த்தினார்கள். நிகழ்ச்சிக்குத் திருவழகன் தலைமை தாங்கினார்கள். அறவாழி வரவேற்புரை யாற்றினார். சொல்லாய்வறிஞர் அருளி, திருக்குறள் பெருமாள், பாவலர் இளஞ்சித்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

8. இலக்கிய மன்றத் தொடக்கவிழா, பாவேந்தர் நூற்-றாண்டு விழா அரசு மேனிலைப்பள்ளி-சாத்தனூர்.

கடந்த தி.பி, 2021, கன்னி (புரட்டாசி) 6-ஆம் பக்கல் (22-9-90) காரிக்கிழமை, பிற்பகல் 3 மணியளவில், சாத்தனூர், அரசு மேனிலைப் பள்ளியில், இலக்கிய மன்றத் தொடக்க விழா-வும், பாவேந்தர் நூற்றாண்டு விழாவும் பள்ளித் தலைமையாசிரியர்

திரு. சா. தியாகராசன், க.மு., கல்.மு, அவர்கள் தலைமையில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சிக்குப் பள்ளித் தமிழாசிரியரும், நெடுநாளைய தென்மொழி அன்பரும் புரவலரும், முகவரும் ஆகிய புலவர் மு. ஆறுமுகம் க.மு., கல்.மு அவர்கள் வரவேற்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் பாவலர் இளஞ்சித்திரன் அவர்களும் கலந்து கொண்டு நல்லுரையாற்றினார். இறுதியில் உதவித் தலைமையாசிரியர் நா. இராமசாமி நன்றி கூறினார்.

9. பாவேந்தர் நூற்றாண்டுச் சிறப்புக் கூட்டம் :

தாராபுரம், தமிழ்க்கலை மன்றத்தின் சார்பில், சென்ற திருவள்ளுவராண்டு 2021 துலை 10- ஆம் பக்கலில் (27-10-90) காரி இரவு 8-30 மணிக்கு பாவேந்தர் நூற்றாண்டுச் சிறப்புக் கூட்டம் காந்தி திருமண மண்டபத்தில் நிகழ்வுற்றது. தாராபுரம் நகர் மன்றத் தலைவர் திரு. பா. செல்லதுரை தலைமை தாங்கினார்.

மன்றத்துணைத் தலைவர் மருத்துவர் திரு. மா. தங்கராசு சி.ம.அ.இ. அனைவரையும் வரவேற்றார். செயற்குழு உறுப்பினர் திரு. ப. கதிரவன் அறிக்கை படித்தார். மன்ற வாணாள் உறுப்பினரான திரு. மா. நடராசன், க.மு. கல்.மு தமிழ்நாடு அரசின் நல்லாசிரியர் விருது பெற்றமைக்கு மன்றத்தலைவர். திரு. சு.கு.- தங்கராசு அறி.இ.ச.இ. பாராட்டிப் பேச. புலவர் மு, பெருமாள் க.மு. கல்.இ. வாழ்த்துப்பா வழங்கிச் சிறப்புரையாற்ற, வருகை தந்த பாவலரேறு திரு. பெருஞ்சித்திரனார் அவர்கள், அவர்க்குக் கைத்தறி ஆடை அணிவித்தார்.

திரு. மா. ஈசுவரன் கருத்துரையாற்றிய பின், பாவலரேறு அவர்கள் $2\frac{1}{4}$ மணிநேரம் இனிய தமிழில் பயனுறும் சொற்பொழிவு நிகழ்த்தினார். தாம் பாவேந்தரோடு ஆறு ஆண்டுகள் தொடர்பு கொண்டிருந்ததும், தமிழ் மொழியின் முதுமையும், பாரதிதாசனாரின் பாடல்களில் தமிழுக்கும் தமிழினத்துக்குமாகப் பொதிந்திடும் கருத்துகள் விளக்கமும் அவரது செந்தமிழ்ப் பேச்சில் நடுவமாக விளங்கின.

10. இல. கவுரி—சீ. இராசேந்திரன் நீடு வாழ்க!

நிகழும் தி.பி. 2021, துலாம் (ஐப்பசி) 19-ஆம் பக்கல் (5-11-90) திங்கட்கிழமை காலை 6 மணியளவில், வேலூர் வட்டம், கீழ்வல்லம் புலவர் வ.சி. இலக்குவன்-உருக்குமணி இணையரின் செல்வி இல. கவுரிக்கும், இடையஞ்சாத்து, பெ. சீத்தராமன்-சவரிஅம்மாள் இணையரின் மகன் செல்வன் சீ. இராசேந்திரன் அவர்களுக்கும், கண்ணமங்கலம்-புதுப்பேட்டை, சக்தி திருமணக் கூடத்தில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த்திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி புலவர், அ. சுந்தரேசன் முதலியோர் நல்லுரை வழங்கினர்.

11. தமிழீழ விடுதலைப்போர்—மாவீரர் நாள்!

சென்ற 24-11-90 அன்று காலை 9 முதல் மாலை 4 வரை

சென்னை, தேவநேயப் பாவாணர் நூலக அரங்கத்தில் தமிழ் நாட்டு அன்னையர் முன்னணியும், அம்பத்தூர் திலீபன் மன்றமும் இணைந்து, தமிழீழ விடுதலைப் போர்-மாவீரர் நாள் நிகழ்ச்சியை நடத்தினர். எழுச்சி இசை, கருத்தரங்கம், பாட்டரங்கம், ஒளியிழைப் படக்காட்சி (வீடியோ) என நான்கு பிரிவாக நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளில் பாவலரேறு பெருஞ்சித்திரனார், ஈழவேந்தன், தியாகு, இளவேனில், முனைவர் கு. இராசேந்திரன், செல்வி அருள்மொழி, முனைவர் மனோகரன், பாவலர் இன்குலாப், அக்னிபுத்திரன் முதலியோர் கலந்து கொண்டனர். இடைவேளையில் தேனிசை செல்லப்பாவின் எழுச்சிப் பாடல்கள் இருந்தன.

12. வல்லாண்மைச் சாதி ஒழிப்பு மாநாடு-கடலூர்:

கடந்த 25-11-90 காரிக்கிழமை, கடலூர் நகர மன்றத்தில், தமிழ்நாடு இளைஞர் பேரவை, தமிழ்நாடு மாணவர் பேரவை சார்பில், வல்லாண்மை (ஆதிக்க)ச் சாதி ஒழிப்பு மாநாடு நடந்தது. சுகுமாரன் வரவேற்புரை நிகழ்த்தினார். காலையில் நடந்த மாணவர்-இளைஞர் அரங்கத்தில், தே. பவணந்தி தலைமையில், சென்னை இறை.அங்கயற்கண்ணி,மலர் வாலண்டினா,இரா. வைத்தீசுவரன், இரா. மோகனசுந்தரம், இரா.ச. சொக்கநாதன் ஆகியோர் கருத்துரை செய்தனர்.

பின்னர் மா. பொழிலன் (த.இ.பே.) தலைமையில் நடந்த கருத்தரங்கத்தில் குணா (வெங்காலூர்) கட்டுரை படிக்கப் பெற்றதுடன், அ. மார்க்சு அவர்களின் கருத்துரை நிகழ்ந்தது.

பகல் உணவுக்குப் பின், அக்கினி புத்திரன் தலைமையில் தமிழ்மணி, தென்முக நம்பி, பழமலை, குணத்தொகையன் ஆகியோர் பாவரங்கேறினர். அதன் பின்னர் மக்கள் கலைமன்றத்தினரின் புரட்சிப் பாடல்கள் முழங்கினர்.

மாலை நடந்த பொது அரங்கத்திற்கு குணத்தொகையன் தலைமையேற்றார். தமிழ் முகிலன், வீரபாண்டியன், அசுவகோசு, அம்பேத்கர் பிரியன், பா. கல்யாணி, பா. அருளி, பாவலரேறு ஆகியோர் எழுச்சியுரை நிகழ்த்தினர்.

13. புதுவை, தனித்தமிழ் இயக்க 2-ஆம் மாநாடு:

கடந்த தி.பி. 2021, நளி 15,16 (1-12-90, 2-12-90) காரி ஞாயிறு ஆகிய நாள்களில், புதுச்சேரி, கம்பன் கலையரங்கில் 'இரண்டாம் தனித்தமிழ் இலக்கிய மாநாடு' 'பாவேந்தர் நூற்றாண்டு விழா' எனும் இருபெரும் விழாக்கள் மிகச் சிறப்புடன் நடைபெற்றன.

முதல்நாள் மாலை 4 மணியளவில் சி. தமிழ்மாறன் க.மு., கல்.இ. அவர்கள் தலைமையிலும், பெரியவர் மூர்த்தி ஐயா, க. குணத்தொகையன் ஆகியோர் முன்னிலையிலும், பிள்ளைத் தோட்டத்தில் உள்ள பெரியார் திருவுருவச்சிலை அருகிலிருந்

ஊர்வலம் ஒன்று நடந்தது. ஊர்வலத்தைத் தொடக்கி திருமிகு மு. அரசன் (எ) வாழுமுனி (புதுவை, சட்ட மன்றச் சாட்டைத் -தகையர் — சட்ட மன்றக் கொறடா) நடத்திச் சென்றார். மாலை6-30மணியளவில் முதல்வர் தெ. இராமச்சந்திரன் தொடக்கி வைக்க கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் இரா. திருமுருகன், திருக்குறள் மணி. புலவர் திரு. இறைக்குருவனார் கலந்து கொண்டு கருத்துரையாற்றினர்.

மறுநாள் காலை 9 மணியளவில் இசை அரங்கத்தில் முனைவர் கோ. ஏ. குணசேகரன் (புதுவைப் பல்கலைக் கழகம்) அவர்கள் நாட்டுப்புற இசையில் பாவேந்தர் பாடல்களைப் பாடினார். பின்னர் நடந்த நூல் வெளியீட்டரங்கத்தில் 'தனித்தமிழ் ஆய்வுக் கோவை', 'பாவேந்தர் ஆய்வடங்கல்' The Bard as Rebel ஆகிய நூல்களும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 'தமிழீழம்' நூலும் வெளியிடப் பெற்றன. மு. தமிழ்க்குடிமகன் சிறப்புரையாற்றினார்.

மாலை 3-30 மணியளவில் பாட்டரங்கம் நடைபெற்றது. மாலை கருத்தரங்கத்தில், முனைவர் க.ப. அறவாணன், சொல்லாய்வறிஞர் ப. அருளி. பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

இரவு 9-30 மணியளவில் பாவலர் மகிபை பாவிசைக்கோ அவர்களின் 'தன்னுரிமை மனமகிழ் மன்றத்தின்' பாவேந்தர் கண்ட தமிழச்சி' எனும் அரிய சிறப்புமிக்க நாடகம் நடைபெற்றது. இறுதியில் பெ. தமிழ்நாவன் நன்றியுடன் நிகழ்ச்சிகள் நிறைவுற்றன.

14. ஐம்பெரும் விழா — வேலூர்.

கடந்த 22-12-90 காரிக் கிழமை, 23-12-90 ஞாயிற்றுக் கிழமை இருநாள்களிலும். வேலூர், வள்ளல் மேதகு மாசிலாமணி மாணவர் விடுதியில், காலை, மாலை இருவேளைகளிலும், மொழி ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் நினைவுக் கருத்தரங்கம், நகைச்சுவையரசு என்.எசு. கிருட்டிணன், நடிகவேள் எம். ஆர். இராதா பிறந்த நாள் கருத்தரங்குகள், அண்ணல் அம்பேத்கார் புரட்சிப் பாவேந்தர் ஆகியோர்க்கு நூற்றாண்டு விழா ஆகிய ஐம்பெரும் விழா இனிதே நடைபெற்றது.

ஐந்து விழாக்களிலும் தோழியர்கள் வே. இரா. சங்கமித்திரை, அ. அருள்மொழி, இந்துமதி, தேன்மொழி அருட்செல்வன், ஆகியோர் கலந்து கொண்டு தலைமையுரைகளும் சிறப்புரைகளும் ஆற்றினர். பாவலரேறு பெருஞ்சித்திரனார் இரண்டு நாள்களிலும் பாவாணர் தமிழ்த் தொண்டு, பாவேந்தரின் தமிழ்த் தொண்டு ஆகிய தலைப்புகளில் அரிய சிறப்புரைகளை ஆற்றினார். விழாக்களை ஒரு தனித் தமிழினத் தொண்டரும், சலியா உழைப்பாளியுமாகிய நா. செந்தமிழ்க்கோ ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

O

தோள் கொடுப்போம் என உள்மனத்தோடு உள்ளம் கனிந்த அன்போடு இருகை கூப்பி மனம் நிறைந்த வாழ்த்தினை மகிழ்வோடு தெரிவிக்கின்றோம்; நன்றி! வணக்கம்! அன்பன், தமிழினத் தொண்டியக்க உறுப்பு,-மு. பச்சையப்பன், புதுவை-9

O : 1449 : ''தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மை யுளெல்லாந் தலை''—

பேரன்புடைய ஐயா அவர்களுக்கு நாரா—மகிழ்நன், இரேணுகா வணக்கத்துடன் எழுதிக் கொண்டது.

உங்களுடைய பிறந்த நாளில்—உங்களின் கொள்கைகளும் கோட்பாடுகளும் இப்பிறவியிலேயே எய்தவேண்டும் என்று இறைவனை வேண்டியும், தாங்களும் உடல் நலனுடன் இருக்க வேண்டியும் வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம். உங்கள் அன்பினையும், மகிழ்வையும் விரும்பும்

— நாரா. மகிழ்நன் இரேணுகா, திருச்சி-14

: 1450 : அன்புள்ள ஐயா, வணக்கம்; நலமே சூழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்; மார்ச்சு திங்கள் 10 ஆம் நாள்-தங்கள் பிறந்த நாள்! ஒரு மகிழ்ச்சியான நாள்; பணிகளின் அழுத்தங்களினால் என்னாலும் நண்பர் சேரலாதனாலும் சென்னைக்கு வர இயலவில்லை. பொறுத்தருளுங்கள்;

நம் செந்தமிழன்னை தங்களுக்கு நெடிய வாழ்வினையும் அனைத்து நலங்களையும் வழங்குமாறு வேண்டுகிறோம். தங்களுக்கு எங்கள்மனங்கனிந்த பிறந்த நாள் வாழ்த்துகள். தங்களன்புள்ள.

—பொற்செழியன், சேரலாதன், பெங்களூர்-1

(ஆசிரியர் விடை : தாங்கள் இருவரும் என் பிறந்தநாள் அன்பளிப்பாக விடுத்த உருபா ஆயிரத்தையும் நெஞ்சு நிறைந்த நன்றியுடன் பெற்றுக் கொண்டேன். —ஆ-ர்)

O : 1451 : பேரன்பு சான்ற பெருந்தகையீர்! அகங்கனிந்த கை கூப்பு. புதிய தமிழகத்தைப் படைக்கப் புத்தொளி மிக்க இளைஞர்களை உருவாக்கும் தங்கள் திருப்பணிகட்கு என் பணிவான வணக்கங்கள்; என் ஒத்துழைப்புகளும் தொடரும்.

'தென்மொழி' இதழுக்கு நன்கொடை அனுப்பியுள்ளேன்; முன்னர் ஒரு முடங்கலும் வரைந்துள்ளேன்.

வாழ்க தமிழ்! வீழ்க தடை! வெல்க நம் படை! அன்பன்,

— இல.சொ. சத்தியமூர்த்தி-குடந்தை

O : 1452 : அன்பின் ஐயா வணக்கம். தங்களின் விடுதலை உணர்வுகளை தங்கள் தாளிகை வாயிலாகப் படித்து 'இன விடிவு உண்டு' என்று நம்பிக்கையுடன் இக்கடிதம் எழுதுகிறேன். பம்பாய் அன்பு எனக்கு வேண்டிய நண்பர். தங்களைக் கண்டு சில செய்திகள் பேச விருப்பம். அடுத்த நிலை 25-ஆம் பக்கல் வெளிக்கிடைப் படுகொலை நினைவு நாளைத் தங்களைப் பம்பாய்க்கு வரவழைத்து நடத்த எண்ணியிருக்கிறோம். 'சோ' நாடகம் பம்பாய் சண்முகானந்த சபாவில் நடந்தது. நாங்கள் சிலபேர் புலிகளின் பொத்தகங்கள், எழுகதிர் 'தமிழ்நிலம்' 'தமிழ்ச் சிட்டு' மற்றும் விடுதலை உணர்வு இதழ்களை முன் நின்று விற்பனை செய்து கொண்டு இருக்கும் போது, சபை மேலாளர் சீனிவாசன் ஐய என்பவர் வந்து இங்கு விற்கக் கூடாது என்று எங்களைத் தடு விட்டார் இதை ஏன் எழுதுகிறேன் என்றால், நாம் எவ் வீரத்தோடு முயற்சி எடுக்க வேண்டிய காலகட்டத்தில் கிறோம்: இதைத் தங்கள் இதழில் துணிவோடு நம் இளைஞ ஊடகச் சொல்வதைப் பாராட்டுகிறேன். தம்பி

அடுத்த பிறந்த நாளைச் சிறப்பாகப் பம்பாயில் எழுச்சியுடன் நடத்த பணிகள் செய்கிறோம்; தங்களை அழைத்துப் பம்பாயில் நடத்த விரும்புகிறோம்; தங்கள் விருப்பம் தெரிவிக்கவும்;

நன்றி வணக்கம்! அன்புடன்

—ம. செ. செல்வராசு' பம்பாய்-71

O : 1453 : அன்புடையீர், வணக்கம்; நம் தமிழ்க் குமுகாயத்தின் நன்மைக்கு உதவும் ஒரு கருத்தை இக்கடிதத்தின் மூலம் தங்களிடம் தெரிவிக்க விரும்புகிறேன்;

உலக மக்கள் அனைவரும் ஏதாவதொரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர்; தமிழர்கள் தங்களை "இந்து" மதத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்லிக்கொள்ள வேண்டியதிருக்கிறது; ஆனால் இந்து மதமோ தமிழ்ப் பண்பாட்டைக் கெடுக்கக் கூடிய கருத்துகளின் தொகுப்பாக உள்ளது; எனவே தமிழர்கள் இந்து மதத்திலிருந்து விடுபட வேண்டும்;

அதற்கு, தமிழர்க்கென ஒரு தனி மதம் அமைதல் வேண்டும்; "தமிழ் மதம்" என ஒன்று தொடங்கப் பட வேண்டும்; மதம் என்றால் தமிழில் கொள்கை என்று கூடப் பொருள் உள்ளது;

அடுத்து, தமிழ் மதத்தின் புனித நூலாகத் திருக்குறள் அமைய வேண்டும்; இவற்றை உடனே தமிழறிஞர்கள், அரசியல் காரர்கள் அனைவரும் சேர்ந்து நிறைவேற்றினால், தமிழர் வாழ்வு வளம் பெறும்; இது குறித்துத் தங்களின் கருத்தை எழுத வேண்டுகிறேன்; உண்மையுடன்;

— அருள்செல்வன், சிட்லபாக்கம்; சென்னை-64

O : 1454 : பேரன்பிற்கும், பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு வணக்கம்;

தமிழ், தமிழினம், தமிழ்நாடு இம்மூன்றின் மீதும் உண்மையான மெய்யன்பு கொண்டு, அதற்காகவே தொய்வின்றித் தொண்டாற்றி வரும் தங்களை இத்தமிழினம் தெரிந்திருந்தும் புரிந்து கொள்ளாமல் இருப்பதை நினைக்கும் போது வருத்தமாக உள்ளது; ஆனால் இதைக் கூறும் நானும் இதற்கு நெறி (விதி) விலக்கு அல்லவே என்பதை உணரும் போது துயரம் கலந்த சிரிப்புதான் வருகிறது;

உருபா 3000-க்கும் குறையாமல் சம்பளம் வாங்குகிற தொழிலாளி ஆகிய எனக்கு, ஏறத்தாழப் பத்து ஆண்டுகளாகத் தங்களைத் தெரிந்து கொண்டும், அறிந்து கொண்டும், உரையைக் கேட்டுக் கொண்டும், தங்களோடு மிகச் சில நேரம் பேசியும் வந்திருக்கின்ற நிலையில், இப்போதுதான் தமிழினத்திற்கான என் கடமை எவ்வாறு இருக்க வேண்டும் என்பது கொஞ்சமாகப் புரியத் தொடங்கியுள்ளது;

எதற்காக இதைக் கூறுகிறேன் என்றால், சுவடி-25, ஓலை 3இன் ஆசிரிய உரையில், 'திருக்குறள் மெய்ப் பொருளுரை' எழுதி வெளிக் கொண்டு வரப் போவதாகத் தாங்கள் சொல்லுறுதி (நான் அப்படித்தான் கருதுகிறேன்) அளித்திருந்திருந்தீர்கள்; என்னை வாழ வைக்கும் இத்தமிழ்க் குமுகாயத்திற்கு நான் என்ன

(தொடர்ச்சி உள்ளே 7-ம் பக்கம்)